விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 010 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 13 வெள்ளிக்கிழமை (29.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### ஈழத் தமிழர்களை நேசித்த
# ‘கேப்டன்’ விஜயகாந்த் நேற்றுக் காலமானார்



(சென்னை)

தே.மு.தி.க தலைவரும் நடிகருமான புரட்சிக் கலைஞர் “கேப்டன்” விஜயகாந்த் (வயது-71) நேற்றுக் காலமானார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

### யாழில் டெங்கைக் கட்டுப்படுத்த
# பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை மேலதிகமாக வரவழைக்க நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் டெங்கு நோய் நிலைமையை கட்டுப்படுத்த மேலதிகமாக அயல் மாவட்டங்களிலிருந்தும் யாழ்ப்பாணத்திற்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை வரவழைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும் யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருமான மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.


நேற்று யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு

15

# யாழ். ஒருங்கிணைப்பு கூட்டத்தில் குழப்பம்

(யாழ்ப்பாணம்)

- மீனவர்கள் விவகாரம் தொடர்பில் தமிழ் எம்.பிக்கள் - அமைச்சர் டக்ளஸ் கருத்து மோதல்
- கூட்டத்தின்போது சபையின் நடுவில் வந்தவரால் பரபரப்பு.



யாழ்.மாவட்டத்தின் நடப்பாண்டுக்கான இறுதி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ்

15

### ஜனவரி மாதம் முதல்
# எரிபொருள், எரிவாயு விலைகளில் மாற்றம்

(கொழும்பு)

ஜனவரி மாதம் முதல் எரிபொருள், எரிவாயு விலைகளில் மாற்றம் ஏற்படவுள்ளதாக தெரவிக்கப்படுகின்றது.

எரிவாயு, பெற்றோல் மற்றும் டீசல் விலைகளில் ஏற்படும் மாற்றம் தொடர்பில் ஜனாதிபதி ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் விளக்கமளிக்கப்பட்டது.

16

# யாழில் இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கில் பக்ரீறியா
## விசாரணைக்கு ஆளுநர் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

யாழுக்கு இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக் கிழங்கில் பக்ரீறியா தொற்றுத் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறு வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் வலி

15

### சதொசவில்
# 6 பொருட்களின் விலை குறைப்பு

(கொழும்பு)

அத்தியாவசிய பொருட்கள் சிலவற்றின் விலைகளை குறைப்பதற்கு சதொச நிறுவனம் தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

இதன்படி, ஆறு அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்

15

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் ஜனவரி மாதம் பாராளுமன்றத்தில்
## சபையில் நீதி அமைச்சர் விஜயதாஸ



(கொழும்பு)

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை எதிர்வரும் ஜனவரி மாதம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அந்தச் சட்டமூலத்தில் அவசியமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் இந்தச் சட்டமூலத்துக்கு எதிரா

15

# மன்னாரில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(மன்னார்)

தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செல்வேரி கிராமத்தில் உள்ள வீடு ஒன்றிலிருந்து நேற்றுக் காலை உயிரிழந்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்

15




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெகா 60 சீட்டிழுப்பின் ஊடாக வடக்கிலும் பலர் வெற்றிவாகை சூடினர்

(யாழ்ப்பாணம்)

தேசிய லொத்தர் சபையின் மெகா 60 லொத்தரின் குலுக்கலில் வடக்கு மாகாணத்தில் பல அதிர்ஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று நடைபெற்ற குலுக்கலில் 7 பேர் ஒரு மில்லியன் ரூபா வெற்றி பெற்றுள்ளனர். 8 பேர் ஐந்து இலட்சம் ரூபா பெற்றுள்ளனர். 7 பேர் தங்க காசு வெற்றி பெற்றுள்ளனர் மேலும் பலர் ஐந்தாயிரம் ரூபா வெற்றி பெற்றுள்ளனர்.(ம-7)

# பொருளாதார நெருக்கடி தீவிரம்
# நாட்டில் 60 வீதத்திற்கும் அதிகமான குடும்பங்கள் பாதிப்பு

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக 60 வீதத்திற்கும் அதிகமான குடும்பங்களின் மாத வருமானம் குறைவடைந்துள்ளதாக சனத்தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிப்ர திணைக்களம் தெரிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியின் தாக்கம் தொடர்பாக நாடளாவிய ரீதியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்படி, இலங்கையில் நூற்றுக்கு 60.5 வீதமான குடும்பங்களின் மாத வருமானம் குறைவடைந்துள்ளதுடன், மாதாந்த செலவு 91 வீதத்தினால் அதிகரித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

தற்போது நாட்டில் 3.4 வீதமான குடும்பங்களின் வருமானம் மாத்திரம் அதிகரித்துள்ள நிலையில், 36.6 வீதமான குடும்பங்களின் வருமானத்தில் மாற்றம் எதுவும் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

வருமானம் குறைந்துள்ள குடும்பங்களில் 73.6 வீதமானவர்கள் வருமானத்தை அதிகரிப்பதற்கு எந்தவொரு நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், 6 வீதமானவர்கள் மேலதிக வருமானம் அல்லது கூடுதல் வேலைவாய்ப்பை பெற்றுள்ளதாக சனத்தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபர திணைக்களம் தெரிவித்துள்ளது.

வருமானம் குறைந்த குடும்பங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கடன் பெறுதல், பொருட்களை அடமானம் வைத்தல், பிறரிடம் உணவு மற்றும் பணம் பெறுதல் உள்ளிட்ட விடயங்கள் உள்ளடங்குவதாக கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக 22 வீதமான குடும்பங்கள் கடனினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

பொருளாதார நெருக்கடி காரணமாக 2022ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குப் பின்னர் சுமார் 50 வீதமானோர் தொழில் ரீ தியான மாற்றங்களை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)


## குடியரசுத் தலைவரிடம் இந்து அமைப்புக்கள்

**1. மதமாற்றத் தடைச்சட்டம்**

**2. பசு வதைத் தடைச்சட்டம்**

இரண்டையும் உடனடியாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுமாறு யாழ்ப்பாணத்துக்கு 06.01.2024 வருகின்ற குடியரசுத் தலைவரிடம் வட மாகாணத்திலுள்ள சைவ அமைப்புக்கள் கோருவது தொடர்பாகக் கலந்துரையாடும் ஆலோசனைக் கூட்டம் 31.12.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறும். வட மாகாண இந்து அமைப்புக்களின் பேராளர்கள் கலந்து கருத்துரைக்குமாறு அழைக்கின்றோம்.

இந்து அமைப்புக்களின் ஒன்றியம்,யாழ்ப்பாணம்

077 960 3001

(18415)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் திரு.**வ.ஜெயவிந்தன்** அவர்களின் அன்பு தந்தையார்



அமரர்

**இரத்தினவேல் வடிவேல்**

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

(C-8042)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி





# மணிவிழா வாழ்த்து

29.12.2023

### மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்துக்குட்பட்ட சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலகக் கடமை நிறைவேற்றும் கோட்டக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் திரு.**வல்லிபுரம் நடராசா** அவர்களின் சேவை நலனைப் பாராட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதனையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

1988ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை தென்மராட்சி பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்காக 35 வருடங்கள் அரச சேவையில் ஆசிரியராக, அதிபராக மற்றும் கோட்டக்கல்வி அதிகாரியாகவும் இருந்து தனது பணியினை செவ்வனே நிறைவேற்றியுள்ளார்.

இவர் ஆற்றிய கல்விப் பணிக்கு நன்றி கூறுவதுடன் இவரது இளைப்பாற்றுகைக் காலம் சிறப்பாக அமைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு தாம் பெற்ற கல்விச் செல்வத்தை இவ்வையகம் முழுவதும் பெறக்கூடிய வகையில் மேலும் பல கல்விமான்களை உருவாக்கி அவர்தம் பணி சிறக்கவும் கல்விப் பணி தொடரவும் வாழ்த்துகின்றேன்.

திரு.தி.ஜோன் குயின்ரஸ்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
வட மாகாணக் கல்வித் திணைக்களம்



## திரு. வல்லிபுரம் நடராசா

**(B.A.(Hons) PGDE, MED) SLPS I**

*சேவை விபரம்*

- ஆசிரியர் சேவை : 17.08.1988 - 01.12.2002
- அதிபர் சேவை : 02.12.2002 - 29.06.2015
- கோட்டக்கல்விப் பணிப்பாளர் சேவை : 30.06.2015 - 28.12.2023

35 வருடங்கள் கல்விப் பணியாற்றி மணிவிழாக் காணும் தங்களை வாழ்த்துவதுடன் தங்கள் ஓய்வுகாலம் சிறப்பாக அமைய இறைவனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
அதிபர்கள்
தென்மராட்சிக் கல்வி வலயம்

(C-8041)

### வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

எமது வலயத்தினைச் சேர்ந்த சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலகத்தில் கோட்டக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றும் திரு.**வல்லிபுரம் நடராசா** அவர்களின் மணிவிழாவுக்கு வாழ்த்துரை வழங்குவதில் அகமிக மகிழ்கின்றேன்.

இவர் தென்மராட்சியின் பாரம்பரியங்களையும் பண்பாட்டையும் கட்டிக் காக்கும் இடைக்குறிச்சி மண்ணில் பிறந்து தான் பிறந்த மண்ணுக்கு பெருமை சேர்த்தவர். தென்மராட்சி மண்ணிலேயே ஆசிரியர் நியமனம் பெற்று ஓய்வுவரை இப்பிரதேசத்திலேயே கடமை புரியும் பாக்கியம் பெற்றவர். 14 வருடங்கள் ஆசிரியராகவும் 12 வருடங்கள் அதிபராகவும் 9 வருடங்கள் கோட்டக்கல்விப் பணிப்பாளராகவும் இவர் கல்வித்துறைக்கு ஆற்றிய பணிக்கு இவரது மாணவர்களும் இவரது வழிகாட்டலில் வாண்மை விருத்தி பெற்ற ஆசிரியர்களும் அதிபர்களும் என்றென்றும் சான்றாய் விளங்குவர்.

கம்பீரத் தோற்றத்தாலும் சிம்மக்குரலாலும் தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட இவரின் மணிவிழா நாளில் தனது குடும்பத்தினருடனும் உற்றார், உறவினர்களுடனும் சமூகத்துடனும் இன்புற்று வாழ்கவென வாழ்த்துகின்றேன். அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றாலும் சமூகப் பணியைத் தொடர்ந்து புரியும் வல்லமையை இறைவன் இவருக்கு அருள வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.


இடைக்குறிச்சி மண் பெற்றெடுத்த இளஞ் சிங்கம்
சூரியறஜனியின் கைத்தலம் பற்றிய கண்ணாளன்
சூட்சும புத்தியால் சுடராய் விளங்கிய சூரியன்
மணிவிழா நாளில் மங்கலம் பெறவே வாழ்த்துகிறேன்
மாண்புடன் வாழிய வாழியவே!

த.கிருபாகரன்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிந்தவரை முகக்கவசம் அணியுங்கள்

## கோரிக்கை விடுக்கும் சுகாதார அமைச்சர்



(கொழும்பு)

**நாட்டு மக்களை மீண்டும் முகக்கவசம் அணிந்து கொள்ளுமாறு சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

அத்துடன் நாட்டில் நோய் பரவல் தொடர்பில் அதிகாரிகள் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் சுகாதார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மீண்டும் ஜே.என்.01 (JN 1 OMICRON) உப பிறழ்வான புதிய கொவிட் வைரஸ் திரிபு பரவி வரும் நிலையிலேயே அமைச்சர் இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது நாட்டில் மீண்டும் கொவிட் - 19 தொற்று பரவும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. கொரோனா வைரஸின் புதிய திரிபான ஜே.என்.01 கடந்த செப்டம்பர் மாதம் அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டு பின்னர் 41 நாடுகளில் பரவியுள்ளது.

இலங்கையில் பரவும் அபாயம் இருக்கின்றதா என்பது தொடர்பில் அதிகாரிகள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர்.

இலங்கையைப் பொறுத்த வரை அந்த தொற்று பரவும் அபாயம் குறைவாக இருந்த போதிலும் பொதுமக்கள் அவதானமாக செயற்படுவது பாதுகாப்பானதாகும்.

நாட்டில் கொவிட் கட்டுப்பாட்டுக்கான பரந்த தடுப்பூசி திட்டம் நடைமுறையில் இருந்தாலும் நாட்டு மக்கள் கொவிட்டில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்கு முகக்கவசம் அணிந்து கொள்வது உகந்தது என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கொவிட் காலத்தை போன்று மீண்டும் முகக்கவசம் அணியுமாறு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நிர்பீடணம் உயிரணு தொடர்பான கற்கை நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## மிளகாய்த்தூளில் கலப்படம்

(கொழும்பு)

மிளகாய்த்தூளுடன், பாண் தூள் மற்றும் அரிசித்தூளை கலந்து விற்பனை செய்யும் குழு தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புறக்கோட்டையில் காணப்படும் சில பலசரக்கு வர்த்தக நிலையங்களில் இவ்வாறான மோசடி இடம்பெற்று வருவதாக நுகர்வோர் குற்றம் சுமத்துகின்றனர்.

குறித்த மோசடி நடவடிக்கைகளுக்காக புறக்கோட்டையில் உள்ள மொத்த விற்பனை நிலையங்களில் இருந்து ஒதுக்கப்பட்ட பாண்தூள் மற்றும் அரிசித்தூள் என்பன பயன்படுத்தப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

# எரிபொருள் நுகர்வு

## கணிசமாக குறைந்துள்ளது

### நெருக்கடியில் உரிமையாளர்கள்

(கொழும்பு)

ஏனைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு எரிபொருள் நுகர்வு கணிசமாகக் குறைந்துள்ளதாக பெற்றோலியம் பிரிப்பாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன் தலைவர் ஷெல்டன் பெர்னாண்டோ கூறுகையில்,

எரிபொருளுக்கான நுகர்வோர் தேவை சுமார் 50 சதவீதத்தால் குறைந்துள்ளதால் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

தற்போதைய நிலவரத்தை கருத்திற் கொண்டு எரிபொருள் கொள்வனவுக்கான நிவாரணம் வழங்குமாறு இலங்கை பெறோலிய சட்டபூர்வ கூட்டுத்தாபனத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விலைவாசி உயர்வால் மக்களின் வாகனப் பாவனையும் குறைந்துள்ளது. பலர் பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துகின்றனர்.

முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் கொஞ்சம் கொஞ்சமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

புறநகர்களில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இது தெளிவாக மாற்றம் தெரிகிறது. அந்த வகையில் எரிபொருள் வர்த்தகம் கணிசமாக குறைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (நி-6)

# கம்பஹா வைத்தியசாலையிலும் கொவிட்-19 மரணம் பதிவானது

(கம்பஹா)

சுகயீனம் காரணமாக கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளி ஒருவர் உயிரிழந்ததையடுத்து, அவரது மரணத்துக்கான காரணம் கொவிட்-19 நிமோனியா என தெரியவந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யக்கல பிரதேசத்தில் வசித்து வந்த 63 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பிரேத பரிசோதனையின் போது, அவர் கொவிட் -19 நிமோனியாவால் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதாக கம்பஹா மரண விசாரணை அதிகாரி வைத்தியர் பி.பி.ஆர்.பி. ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் உயிரிழந்தவரின் சடலம் தகனம் செய்யப்பட்டுள்ளதாக கம்பஹா மாநகர சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (நி-6)

# 8 மில். முட்டைகள் சதொசவிற்கு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்பட்ட மேலும் 8 மில்லியன் முட்டைகள் சதொச விற்பனை நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக அரச வர்த்தக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் முட்டைகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதாக அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்தார்.

சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு முட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பண்டிகைக் காலங்களில் முட்டையின் தேவை அதிகமாக இருப்பதால் விரைவாக அவை விற்பனை நிலையங்களில் தீர்ந்து விடுவதாகவும் நாளொன்றுக்கு ஒரு மில்லியன் முட்டைகள் வரை இறக்குமதி செய்யப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-6)

# கைதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பால் நிரம்பி வழியும் சிறைச்சாலைகள்

### நீதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

"யுக்தியா" நடவடிக்கையால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருவதால், சிறைச்சாலைகள் நிரம்பி வழிவதாகவும் கைதிகளை மாற்று கட்டடங்களில் தங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நீதி நடவடிக்கை தொடங்கியதில் இருந்து நாடு முழுவதும் உள்ள இருபத்தெட்டு சிறைகளில் 2 ஆயிரத்து இருநூற்று ஐம்பத்தைந்துக்கும் மேற்பட்ட புதிய கைதிகள் கைது செய்து வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், நீதி நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் நாட்டின் சிறைச்சாலைகளில் இருபத்தெட்டாயிரம் கைதிகள் இருந்ததாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்திருந்தார்.

பொதுவாக இந்நாட்டின் சிறைகளில் சுமார் 11,000 பேர் தடுத்து வைக்கப்படலாம். இதேவேளை, பெண் கைதிகளின் எண்ணிக்கையும் 800 இருந்து 1124ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், சிறைச்சாலைகளில் நிலவும் நெரிசலுக்கு நீண்டகால தீர்வாக மில்லனிய பிரதேசத்தில் ஐம்பது ஏக்கர் காணி தெரிவு செய்யப்பட்டு அங்கு கட்டடங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஆனால் தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு, அரசாங்கத்திற்கு சொந்தமான பாதுகாப்பான வெற்றுக் கட்டடங்கள் அடையாளம் காணப்பட்டு, சிறைச்சாலைகளில் உள்ள அதிகபடியான கைதிகள் அந்தக் கட்டடங்களுக்கு அனுப்பப்படுவார்கள் என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார். (நி-6)

# அதிகளவு வரிச்சுமையை திணிக்கும் அரசு நாட்டை விட்டு வெளியேறும் இளைஞர்கள்

### எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வற் வரிஉள்ளிட்ட அதிகளவான வரிச் சுமையை மக்கள் மீது இந்த அரசாங்கம் திணித்துள்ளமையால்பெரும் எண்ணிக்கையிலான இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறிச் செல்வதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இதனால் இளைய சமூகம் எதிர்ப்பார்ப்பிழந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.



இலங்கையை விடவும் அபிவிருத்தி குறைந்த நாடுகள் நோக்கி இளைஞர், யுவதிகள் படையெடுக்கத் தொடங்கியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புத்திஜீவிகள், தொழில் வல்லுநர்கள் போன்றே இளைஞர், யுவதிகளும் நாட்டை விட்டு பெருவாரியாக வெளியேறிச் செல்லும் நிலையை அவதானிக்க முடிகிறது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மையப்படுத்தி அரசாங்கம் செயற்படத் தவறியுள்ளதாகவும் நாட்டின் நிகழ்காலமும் எதிர்காலமும் ஆரோக்கியமானதல்ல என புரிந்து கொண்டவர்கள் நாட்டை விட்டு வெளியேறிச் செல்வதாக சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# வெற்றி வாகை சூடியது பைட்டர் கிங்ஸ் அணி



KSPL சீசன் இரண்டின் வெற்றிக் கிண்ணத்தை வெற்றி வாகை சூடியது பைட்டர் கிங்ஸ் அணி.

கட்டைக்காடு சென்மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய உள்ளக KSPL சீசன் இரண்டின் இறுதி போட்டி அண்மையில் சென்மேரிஸ் விளையாட்டு கழக தலைவர் பி.றஜீத் தலைமையில் நடைபெற்றது.

குறித்த இறுதிப் போட்டியில் பைட்டர் கிங்ஸை எதிர்த்து திறிடி ஸ்டார் அணி மோதியது

விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தின் முடிவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோலினை போட ஆட்டம் சமநிலைக்கு வந்ததால் வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்கு தண்ட உதைப்பு வழங்கப்பட்டது.

தண்ட உதைப்பை பயன்படுத்தி பைட்டர் கிங்ஸ் வெற்றி பெற்று KSPL சீசன் இரண்டின் வெற்றிக் கிண்ணத்தை தமதாக்கி கொண்டனர். (நி-6-60)

# ஹாரி, எம்பாப்பேவை ஓரங்கட்டி முதலிடத்தை பிடித்த ரொனால்டோ



2023 ஆம் ஆண்டில் அதிக கோல்கள்அடித்த வீரர் எனும் சாதனையை படைத்துள்ள கிறிஸ்டியானோ ரொனால்டோ.

அல் நஸர் மற்றும் அல் இட்டிஹாட் அணிகளுக்கு இடையிலான போட்டி பிரின்ஸ் அப்துல்லா அல் பைசல் மைதானத்தில் நடந்த போட்டியில்

அல் இட்டிஹாட் வீரர் அப்டெர்ரசாக் ஹம்டல்லாஹ் கோல் அடித்தார்.

அதனைத் தொடர்ந்து 19 ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை கிறிஸ்டியானோ ரொனால்டோ கோலாக பதிவு செய்தார்.


பின்னர் அல் நஸரின் தலிஸ்கா 38 ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடிக்க, முதல் பாதியில் 2-1 என அல் நஸர் முன்னிலை வகித்தது.


ஆட்டத்தின் 51ஆவது நிமிடத்தில் அப்டெர்ரசாக் மீண்டும் ஒரு கோல் அடிக்க, அதற்கு பதிலடியாக ரொனால்டோவுக்கு மீண்டும் ஒரு பெனால்டி வாய்ப்பு கிடைக்க இரண்டாவது கோலை அடித்து அசத்தினார்.

அடுத்ததாக சாடியோ மானே 75 மற்றும் 82ஆவது நிமிடங்களில் கோல்கள் அடிக்க அல் நஸர் 5 - 2 என அபார வெற்றி பெற்றது.

இப்போட்டியில் ரொனால்டோ 2 கோல்கள் அடித்ததன் மூலம் 2023ஆம் ஆண்டில் அவரது கோல் எண்ணிக்கை 53 ஆக உயர்ந்தது.

இதன்மூலம் அவர், தன்னை விட அதிக கோல்கள் அடித்திருந்த கைலியன் எம்பாப்பே மற்றும் ஹாரி கேன் ஆகிய இருவரையும் பின்னுக்கு தள்ளி முதலிடத்தை பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுனாமியில் உயிரிழந்தவர்களில்

# இன்னமும் அடையாளம் காணப்படாத 137 பேரின் உடற்பாகங்கள்

(கொழும்பு)

2004 ஆம் ஆண்டு சுனாமி பேரிடரில் சிக்கி உயிரிழந்த 137 பேரின் அடையாளம் காணப்படாத உடற்பாகங்கள் காலி கராப்பிட்டிய மருத்துவபீடத்தில் இன்னமும் உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.


137 பேர் யார் என்பது இன்னமும் அடையாளம் காணப்படவில்லை என சட்ட மருத்துவ அதிகாரி பேராசிரியர் யுசிபி பெரேரா தெரிவித்துள்ளார்.

இவர்களின் எலும்பு பரகங்களை ஆராய்ச்சிக்கும் கற்கைகளிற்கும் பயன்படுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தம் இடம்பெற்று ஒன்பது மாதங்களின் பின்னர் தெல்வட்டபெரலிய சதுப்புநிலங்களில் இந்த உடற்பாகங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

உறவினர்கள் அடையாளம் காண்பதற்கான வாய்ப்பை வழங்கினோம். ஆனால் எவரும் அடையாளம் காணவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

## புதிய கட்சியை ஆரம்பிக்கிறார் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா



(கொழும்பு)

புதிய அரசியல் கட்சியொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

முழு நாடும் புது யுகத்தில் காலடி எடுத்துவைக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியல் சூழ்நிலையை விமர்சித்துள்ள அவர் தலைமை வகிக்க தயார். நாளை புதிய கட்சியை ஆரம்பிப்போம் என குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## இந்த வருடத்தில் மட்டும்

# சுமார் 800 பேராசிரியர்கள் நாட்டை விட்டு வெளியேற்றம்

(கொழும்பு)

இந்த வருடம் எண்ணூறுக்கும் மேற்பட்ட பல்கலைக்கழக பேராசிரியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

சுமார் 1000 பேர் வெளிநாடுகளில் விடுமுறையில் இருப்பதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் சாருதத்த இளங்கசிங்க தெரிவித்துள்ளார்.


இதனால் பல்கலைக்கழக நடவடிக்கைகள் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார். (நி-6)

# பொருளாதார குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காதது ஏன்? -பேராயர் கேள்வி

(கொழும்பு)

இலங்கை நீதித்துறை செயற்படும் விதம் தொடர்பில் தமக்கு சந்தேகங்கள் எழுந்துள் எதாக கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்களாக உச்ச நீதிமன்றத்தால் பெயரிடப்பட்டவர்களுக்கு எதிராக இதுவரை சட்டம் நடைமுறைப்படுத்தப்படாத பின்னணியிலேயே, அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.



இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்களுக்கு எதிராக அரசாங்கம் சட்ட நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமென கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பில் அரசாங்கம் மேலும் ஆராய வேண்டும். இதனை தவிர்த்து, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை பொருட்படுத்தாது அரசாங்கம் செயற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாதென அவர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

உச்ச நீதிமன்றத்தை அரசாங்கம் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மதிக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (நி-6)

# துறைமுகத்தில் சிக்கியுள்ள 15 கொள்கலன் மருந்துகள்

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்பட்ட 15 கொள்கலன் மருந்துகள் தற்போது துறைமுகத்தில் சிக்கியுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர், வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

தனியார் துறையினர் இறக்குமதி செய்த மருந்துகளே இவ்வாறு துறைமுகத்தில் சிக்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குறித்த மருந்து நிறுவனங்களின் பதிவு உள்ளிட்ட பல சிக்கல்களினால் இவற்றை விடுவிக்க முடியாதுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இந்த சிக்கல் நிலை தொடர்பில் ஆராய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (நி-6)

# அரசசேவை ஊதியத்தை ரத்து செய்ய யோசனை

## தொழிலாளர் போராட்ட மத்திய நிலையம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரச ஊழியர்களின் ஓய்வூதியத்தை ரத்து செய்ய யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக தொழிலாளர் போராட்ட மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

குறித்த யோசனை அரசியல் மயப்படுத்தல் தொடர்பான தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தொழிலாளர் போராட்ட மத்திய நிலைய செயலாளர் துமிந்த நாகமுவ தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், ஓய்வூதிய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் இந்த முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அரச சேவை ஓய்வூதியத்தை ரத்து செய்து பங்களிப்பு ஓய்வூதியமாக மாற்றுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு, பங்களிப்பு ஓய்வூதியத்தை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் முதலீடு செய்யக் கூடியதாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இது மிகவும் ஆபத்தான பணி எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# இராசிபலன்

29.12.2023
மார்கழி 13, வெள்ளிக்கிழமை
துதியை முற்பகல் 8.10 மணிவரை

பூசம் பின்னிரவு 3.36 மணிவரை
சுபநேரம் -6.28-7.58 மணிவரை
இராகுகாலம்-10.58-12.28 மணிவரை

கெர்ப்போட்டம் ஆரம்பம்
சந்திராஷ்டமம்-மூலம்

வளவன்

**மேஷம்** கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**கடகம்** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீகள், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும், போசன சுகமுண்டு.

**துலாம்** குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், முயற்சிகள் கைகூடும்.

**மகரம்** நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி அடி எடுத்து வைப்பீர்கள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நட்பு வட்டம் விரிவடையும் நாள்.

**ரிஷபம்** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், வழிபாடு குதூகலம் தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சந்தித்த நண்பர்களால் சந்தோசம் காணவேண்டிய நாள், கொள்கைப் பிடிப்பைக் கொஞ்சம் தளர்த்தும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**கும்பம்** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், இயல்பான வாழ்க்கையில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்** தொழிலில் அதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும், வழிபாடு காரிய வெற்றி தரும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கன்னி** எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரலாம், சகோதர வழியில் நன்மையுண்டு, வருங்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் கைகூடும், வருமானம் திருப்தி தரும்.

**தனுசு** குடும்பப் பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், வேலைச் சுமை சற்றுக் குறைவான நாள்.

**மீனம்** பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடைகளைக் கண்டு சோர்ந்து விடாதே வெற்றிப்பயணம் தொடரட்டும்.

# டெங்குத் தொற்றாளர்கள் 1,284 பேருக்கு போதனாவில் சிகிச்சையளிப்பு

(யாழ்ப்பாணம்)

டெங்கு நோய்த் தாக்கத்திற்குள்ளான 1284 பேர் மருத்துவமனையில் அனுமதிக கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர் என யாழ். போதனா மருத்துவ மனையின் பணிப்பாளர் சத்திய மூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதேநேரம் நாளாந்தம் 150 பேர் வரையானவர்கள் சிகிச்சைக்காக வருகின்ற நிலையில் நேற்று 84 பேர் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

டெங்குவை காவும் நுளம்புகள் வீரியம் மிக்க நுளம்புகளாக உள்ளதாக பூச்சியியல் ஆய்வு சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை போதனாவில் அதிகளவான நோயாளர்கள் இருப்பதால் அதனை சூழவுள்ள பகுதிகளிலுள்ளவர்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

இதேவேளை தற்போது பரவியுள்ள டெங்கு தொற்றானது மூன்றாவது வகை நுளம்பின் மூலமே பரவுவதாகவும் இது இம்முறையே யாழ்ப்பாணத்தில் பரவியுள்ளதால் மக்கள்.மத்தியில் இதற்கான தற்காப்பு வளங்கள் இல்லாதுள்ளதாகவும் சுட்டிக் காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)



# யாழில் கில்மிஷாவிற்கு பலத்த வரவேற்பு



(யாழ்ப்பாணம்)

சென்னையில் இருந்து யாழ். வந்திறங்கிய கில்மிஷாவிற்கு பலத்த வரவேற்பு அளிக்கப்பட்டது. கில்மிஷா தனது பெற்றோருடன் நேற்று சென்னையில் இருந்து யாழ். சர்வதேச விமான நிலையம் ஊடாக வந்திறங்கியதை அடுத்து விமான நிலை யத்தில் வரவேற்பு இடம் பெற்று வாகன பேரணி மூலம் அரியாலை பகுதிக்கு அழைத்து செல்லப்பட்டார்.

அண்மையில் தென் இந்திய சரிகமபா இசை நிகழ்ச்சியின் இறுதிப் போட்டியில் முதலிடத்தை பிடித்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

## மார்கழி இசைவிழா 2023

காலம்: 29 வெள்ளிக்கிழமை

நேரம்: மாலை 4.45

இடம்: யாழ்.கலாசார மத்திய நிலையம்

### மூன்றாம் நாள் நிகழ்வுகள்

5.00pm-5.05pm
மங்கல விளக்கேற்றல்

5.05pm-5.15pm
தமிழ்த்தாய் வாழ்த்து
இசைப்பிரிவு மாணவர்கள். இந்தியா கோர்னர்.
நெறியாள்கை திருமதி-வாசஸ்பதி ரஜீந்திரன்

5.15pm-5.20pm
திருநிறை வழங்கல்
யாழ்.வணிகர் கழகம் -தலைவர்
திரு. இ. ஜெயசேகரன்

5.20pm-6.20pm
யாழ்.மண்ணின் புகழ் பூத்த தவில் நாதஸ்வர
வித்துவான்களின் இசைச் சங்கமம்

6.20pm-7.05pm
நாட்டிய நாடகம் "கண்டேன் சீதையை"
தயாரிப்பு ,நெறியாள்கை ,நட்டுவாங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நடனத்துறை
4ஆம் வருட மாணவர்கள்

7.05pm-7.35pm
"குரலிசை அரங்கு"
க. ரஜீவன் குழுவினர்

7.35pm-8.05 pm
"பரத நாட்டிய நடன நிகழ்ச்சி"
தமிழ் நாட்டில் இருந்து (ஸ்ரீ சங்கர நாட்டிய வித்யாலயா)
திருமதி. சங்கீதா சிவக்குமார் மற்றும் வேலம்மாள்
வித்யாலயா பள்ளியின் மாணவியர்கள்

8.05pm-9.15pm
"நாட்டுக்கூத்து"
யாழ். பிரதேச கலைஞர்களின் "குருசபதம்"
நாட்டுக்கூத்து

# பல குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்த நபர் கைது


(யாழ்ப்பாணம்)

யாழில் இடம்பெற்ற பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய நபர் 15 லீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கோண்டாவில் பகுதியில் பதுங்கியிருப்பதாக நேற்று முன்தினம் கோப்பாய் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், குறித்த இடத்திற்கு விரைந்த பொலிஸார் சந்தேக நபரை கைது செய்ததுடன், உடைமையில் இருந்து 15 லீற்றர் கசிப்பினையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேகநபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-33)



நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மார்கழி திருவாதிரை உற்சவத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராக உள்வீதி, வெளி வீதி வந்த காட்சி பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

(படம்: சிவசாந்தன்)

## இணைய மோசடியில் பணம் அபேஸ்

(யாழ்ப்பாணம்)

இணைய மோசடியில் சிக்கி மேலும் இருவர் 26 இலட்ச ரூபாய் பணத்தினை இழந்துள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இணையம் ஊடாக அதிக பணம் ஈட்ட முடியும் என ஆசை வார்த்தைகளுடனான விளம்பரங்களை சமூக வலைத் தளங்கள் ஊடாக மோசடிக்காரர்கள் செய் கின்றனர்.

இந்நிலையில் . நேற்று முன் தினம் தினம் ஒருவர் 20 இலட்ச ரூபாவையும் பிறிதொரு நபர் 6 இலட்ச ரூபாவையும் இழந்துள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவ்வாறான இணைய மோசடியா ளர்களிடம் சிக்காது மக்கள் தான் விழிப்புடன் இருக்க வேண்டும் என பொலிஸார் தெரிவித்தனர். (நி-6-33)

# யாழ். நகர்ப் பகுதியில் 2 கடைகளில் தீ விபத்து

## பொருட்கள் எரிந்து நாசம்



(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் உள்ள பெரிய கடை வீதி கடை கட்டட தொகுதியில் நேற்று முன்தினம் இரவு இரண்டு கடைகள் தீயில் எரிந்துள்ளன.

இதன்போது கடையில் இருந்த பெரும்பாலான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

சம்பவ இடத்திற்கு விரைந்த யாழ்.மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினர் தீப் பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-30)

## வில்லுப்பாட்டும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

ஈழ நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசைக்குழு இயக்குநர் கலைமாமணி டாக்டர் எஸ். எஸ்.குருஜீயின் மாணவர் வில்லுப்பாட்டும் நூல் வெளியீட்டு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதினத்தில் நல்லூர் இளங்கலைஞர் மன்ற செயலாளர் ந.செல்வச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

வட மாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (நி-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் தலைதூக்கியுள்ள தட்டம்மை

## தடுப்பூசி வழங்கத் தீர்மானம்-சுகாதார அமைச்சு

**(கொழும்பு)**

**இலங்கையில் தட்டம்மை மீண்டும் தலைதூக்கியுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.**



கடந்த 2019 ஆம் ஆண்டு உலக சுகாதார ஸ்தாபனத்தினால் தொற்றா நோயாக அறிவிக்கப்பட்ட தட்டம்மை நோயானது வெற்றிகரமாக ஒழிக்கப்பட்டதாக அங்கீகரிக்கப்பட்ட நிலையில் தற்போது மீண்டும் பரவத்தொடங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், நோய்த்தடுப்பு என்பது உலகளாவிய ரீதியில் தற்போது பாரிய சவாலை சந்தித்து ள்ளது.

இது உலகளவில் தட்டம்மை நோயாளிகளை மீண்டும் உருவாக்குவதற்கான வாய்ப்பை அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணம் உட்பட கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, கண்டி, குரு நாகல் மற்றும் கல்முனை போன்ற மக்கள் தொகை அதிகமாக உள்ள மாவட்டங்களில் தட்டம்மை நோயாளிகளின் எண்ணிக்கை அண்மையில் அதிகரித்து ள்ளது.

இந்த எதிர்பாராத பின்னடைவை எதிர்த்துப் போராட, உலக சுகாதார ஸ்தாபனத்தின் தெற்காசிய பிராந்திய அலுவலகத்தின் சுகாதார அதிகாரிகள் மற்றும் ஜெனிவா அலுவலகத்துடன் இணைந்து ஒரு சிறப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, 6 முதல் 9 மாதங்களுக்கு இடைப்பட்ட குழந்தைகளுக்கு தட்டம்மை தடுப்பூசிகளை வழங்கு வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக அதிக எண்ணிக்கையிலான நோயாளர்களை கட்டு ப்படுத்த முடியும் எனவும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள் ளது.

மேலும், ஒன்பது மாவட்டங்களில் பிரத்தியேகமாக கவனம் செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் எதிர்வரும் ஜனவரி 6 ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை தடுப்பூசி வழங்கும் செயற்பாடு நடைபெற உள்ளது. இது தவிரவும் தட்டம்மையைக் கட்டுப்படுத்தும் முய ற்சியில், ஆரம்ப தட்டம்மை தடுப்பூசியை தவறவிட்ட 9 முதல் 15 மாதங்களுக்கு இடைப்பட்ட குழந்தைகளுக்கும் தடுப்பூசியை வழங்க சுகாதார அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார். (நி-6)


## சேவைநலன் பாராட்டு

**திரு. ஞானபிரகாசம் யோகராஜா**

(சுகாதார தொழிலாளி விசேட தரம்)

சேவை விபரம்

நல்லூர் பிரதேசசபை-சுகாதாரதொழிலாளி|||
01.02.1984-31.01.1994
சுகாதார தொழிலாளி||
01.02.1994-31.12.2002
சுகாதார தொழிலாளி|
01.01.2003-16.11.2013
விசேடதரம்-17.11.2013-01.01.2024

Best Wishes



எமது அலுவலகத்தில் கடந்த 40 வருடங்கள் சேவையாற்றி 01.01.2024 இல் ஓய்வுபெறும் திரு. ஞானபிரகாசம் யோகராஜா அவர்கள் சகலநலன்களும் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம். (சி-8038)

ஊழியர் நலன்புரிச் சங்கம், நல்லூர் பிரதேசசபை.


## இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு புதிய நியமனங்கள்

(கொழும்பு)

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் புதிய தலைவராக நீதியரசர் நீல் இத்தவல நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, குறித்த ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக செத்திய குணசேகர மற்றும் கே.பேர்னட் ராஜபக்ஷ ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மேற்கொள்ளப்பட்ட பொருத்தமான நியமனங்கள் 2024 ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-6)

### யாழ்.முஸ்லிம் சமூக ஜோதி விருது 2023



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான அல்ஹாஜ் ஆர்.எம். இமாம், சமூக மேன்மைக்காக முன்னின்று உழைத்த முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளரும் சமூகப்பற்றுள்ள கல்வியியலாளருமான அல்ஹாஜ் எம்.எஸ்.ஏ.எம். முஹ்தார், இலக்கியவாதியும் சிறந்த ஆசிரியரும் வானொலி கலைஞருமான அல்ஹாஜ் ஏ.ஸி.நஜ்முத்தீன் ஆகிய மூவரினதும் வீடுகளுக்கு சென்று அவர்களது சேவைகளை பாராட்டி அகில இலங்கை YMMA பேரவையின் முன்னாள் தேசிய தலைவர் அல்ஹாஜ் M.S. றஹீம் J.P அவர்களால் பொன்னாடை அணிவித்து விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதை படத்தில் காணலாம். யாழ்.முஸ்லிம் சமூக ஊடக நிர்வாகி கலாபூஷணம் பரீட் இக்பால் அவர்களின் ஏற்பாட்டில் அகில இலங்கை YMMA பேரவையின் முன்னாள் தேசிய தலைவர் அல்ஹாஜ் M.S. றஹீம் அவர்களின் அனுசரணையில் இடம்பெற்றது. (சி-8037)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# ரஷ்யாவிற்கு வருமாறு மோடிக்கு அழைப்பு



(மொஸ்கோ)

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய் சங்கர் ஐந்து நாள் சுற்றுப் பயணமாக ரஷ்யா சென்றுள்ளார். அவருக்கு அந்நாட்டின் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் ரஷ்யாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜிலா வ்ரோவை சந்தித்து இருதரப்பு விவகாரங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்த நிலையில் ரஷ்ய ஜனாதிபதி புடினை சந்தித்தார். அப்போது இந்திய பிரதமர் மோடியை ரஷ்யாவுக்கு வருமாறு புடின் அழைப்பு விடுத்தார்.

"எங்களுடைய நண்பர் பிரதமர் மோடியை ரஷ்யாவில் நாங்கள் பார்க்க விரும்புகிறோம்"என ஜெய் சங்கரிடம் புடின் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சரை சந்தித்த பிறகு ஜெய்சங்கர் பத்திரிகையாளர்களை சந்தித்தார். அப்போது பிரதமர் மோடி- ரஷ்ய ஜனாதிபதி புடின் ஆகியோர் அடுத்த ஆண்டு நடைபெறும் வருடாந்திர உச்சி மாநாட்டில் சந்திப்பார்கள் என நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தியா - ரஷ்யா இடையிலான உறவு எல்லாவற்றிலும் தொடர்ந்து வளர்ச்சி கண்டு வருகிறது. இதற்கு மோடியின் முக்கியமான உத்தர வாதம் மோடியின் கொள்கை தான்.

இந்திய நாட்டின் பாதுகாப்பிற்காக மோடி எடுக்கும் கடினமான முடிவு என்னை அடிக்கடி ஆச்சரி யப்படுத்தும். உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் இந்திய நாட்டின் பாதுகாப்பு மற்றும் இந்திய மக்களின் நலன் ஆகியவற்றில் மோடி எடுக்கும் கடினமான முடிவு சில நேரங்களில் என்னை ஆச்சரியப்பட வைத்தது.

இந்தியப் பிரதமர் மோடியை நாட்டின் பாதுகாப்பு, மக்கள் நலன் ஆகிவற்றிற்கு எதிராக ஒரு முடிவை கட்டாயப்படுத்தி, மிரட்டி அல்லது வலுக்கட்டாயமாக எடுக்க வைக்க முடியும் என்று என்னால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை. அது போன்ற நெருக்கடி மோடிக்கு இருக்கும் என்பது எனக்குத் தெரியும் என புடின் கூறியிருந்தார்.

இந்தியாவில் நடைபெற்ற ஜி-20 மாநாட்டின் போது. உக்ரைன் மீது தாக்குதல் நடத்திவரும் ரஷ்யாவுக்கு கண்டனம் தெரிவிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்ட நிலையில் ரஷ்யாவின் பெயரை குறிப்பிடாமல் ஒருமனதாக பிரகடனம் நிறைவேற்றப்பட்டது. அப்போது இந்தியப் பிரதமர் மோடிக்கு புடின் நன்றி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# நடிகர் விஜயகாந்த் காலமானார்



(சென்னை)

மியாட் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட தேமுதிக தலைவர் நடிகர் விஜயகாந்த் சிகிச்சை பலனின்றி நேற்று காலமானார்.

நடிகர் விஜயகாந்த் கொரோனா தொற்று பாதிப்பு காரணமாக சென்னை மியாட் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவரது உடல் நிலையில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் கூறியிருந்த நிலையில் மருத்துவமனை வளாகத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

இந்நிலையில் அவர் நேற்றுக் காலை காலமானார் என மருத்துவமனை நிர்வாகம் அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பை அடுத்து தொண்டர்கள் மற்றும் ரசிகர்கள் அதிர்ச்சி அடைந்துள்ள நிலையில் அவரது மறைவுக்கு திரையுலக பிரபலங்கள், அரசியல் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (நி-6)

### விஜயகாந்த்...

சினிமாவில் சூப்பர் ஹீரோ... அரசியலில் அசைக்க முடியாத சக்தி...இரண்டிலுமே அவர் ஆதிக்கம் செலுத்தினார். மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் 1952ஆம் ஆண்டு, ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி அழகர்சாமி-ஆண்டாள் தம்பதியருக்கு மகனாகபிறந்தார். விஜயராஜ் என்கிற விஜயகாந்த் சிறுவயது முதலே அவருக்கு சினிமா மீது ஆர்வம் அதிகமாக இருந்தது. இதனால் அவருக்கு படிப்பின் மீது நாட்டம் குறைந்தது.

சினிமா உலகம் அவரை சிவப்பு கம்பளம்விரித்து வரவேற்க வில்லை. சினிமாவில் சேர வருபவர்கள் படும் அவமானங் களை விஜயகாந்தும் அனுபவித்தார். ஆனாலும் அவர் துவண்டு போய் விடவில்லை.

பல அவமானங்களுக்கும் புறக்கணிப்புகளுக்கும் மத்தியில் 1979ஆம் ஆண்டு "இனிக்கும் இளமை" என்ற படத்தில் டைரக்டர் எம்.ஏ.காஜா, விஜயராஜை நடிகராக அறிமுகப்படுத்தியதுடன் அவருக்கு விஜயகாந்த் என்ற பெயரையும் சூட்டினார். அதன் மூலம் விஜயகாந்த் தன்திரைப் பயணத்தை தொடங்கினார். ஆரம்பகாலகட்டத்தில் விஜயகாந்தின் படங்கள் தோல்வியை சந்தித்தாலும் அவர் தனது முயற்சியை கைவிடவில்லை.

அதனால் 1985 ஆம் ஆண்டுக்கு பிறகு அவர் அசைக்க முடியாத ஹீரோவாக விளங்கினார்.அம்மன் கோவில் கிழக்காலே, ஊமை விழிகள்,நினைவே ஒரு சங்கீதம், உழவன் மகன், செந்தூரப்பூவே, பூந்தோட்ட காவல்காரன், புலன்விசாரணை, சத்ரியன், கேப்டன் பிரபாகரன், சின்னக்கவுண்டர், என் ஆசை மச்சான்,வானத்தை போல, வல்லரசு, ரமணா என ஏராளமான வெற்றிப்படங்களை கொடுத்துள்ளார்.இதன் மூலம் ரஜினி, கமலுக்கு இணையான நடிகராக விஜயகாந்த் விளங்கினார்.

1999ஆம் ஆண்டு விஜயகாந்த் நடிகர் சங்கத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் மூலம் நடிகர்களுக்கு பலவித சேவைகளையும் செய்யத் தொடங்கினார். சிறிய வேடங்களில்நடிக்கும் நடிகர்களையும் நடிகர் சங்கத்தில் சேர்த்து அவர்களுக்கு ஏராளமான உதவிகளை வழங்கியுள்ளார். பல ஆண்டுகளாக அடைக்க முடியாமல் இருந்த நடிகர் சங்க கடனை சிங்கப்பூர், மலேசியா என தமிழர்கள் அதிகம் வாழும் வெளிநாடுகளில் நட்சத்திர கலை நிகழ்ச்சிகள் நடத்தி வட்டியும் முதலுமாக அடைத்தார்.

மேலும், நலிவடைந்த கலைஞர்களுக்கு உதவி செய்வதற்காக ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகம் செய்து, பெரும் தொகையை வங்கியில் டெபாசிட் செய்தார். 2002ஆம் ஆண்டு காவிரி நதிநீர் பிரச்சினை உச்சத்தில் இருந்த போது,அனைத்து நடிகர்களையும் ஒன்றிணைத்து "நீர் தராத கர்நாடகாவுக்கு மின்சாரம் இல்லை" என்கிற முழக்கத்துடன் மாபெரும் போராட்டத்தை நெய்வேலியில் நடத்தினார்.

அரசியலுக்கு வருவதற்கான, சரியான களத்துக்காகவும் அவர் காத்துக் கொண்டிருந்தார். அதற்கும் வாய்ப்பு அமைந்தது. அரசியலுக்கு முன்னோட்டமாக ஊர் ஊராக சென்று தன் ரசிகர் மன்ற நிர்வாகிகளை சந்திக்க ஆரம்பித்தார். சென்ற இடங்களில் எல்லாம் [illegible] கிடைத்தது.

விஜயகாந்தை காண மக்கள் கூட்டம் அலைமோதியது.2005ஆம் ஆண்டு, செப்டெம்பர் மாதம் 14ஆம் திகதி மிகப்பெரிய மாநாட்டை மதுரையில் நடத்தி,"தேசிய முற்போக்கு திராவிட கழகம்" எனும் அரசியல் கட்சியை தொடங்கினார். கட்சிஆரம்பித்து ஓராண்டு நிறைவடையாத நிலையில்,2006ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டசபை தேர்தலில், தனித்து போட்டி என்று அறிவித்து 232 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தினார்.

தனித்தே போட்டியிட்டு வந்த விஜயகாந்த்,முதன்முறையாக 2011ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க வுடன் கூட்டணி அமைத்து தேர்தலை சந்தித்தார். 41 இடங்களில் போட்டியிட்ட தே.மு. தி.க, 29 இடங்களில் வெற்றி பெற்று எதிர்க்கட்சி அந்தஸ்தை பெற்றது.ரிஷி வந்தியம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற விஜயகாந்த் முதன் முறையாக சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவரானார்.

விஜயகாந்த்,அரசியலுக்கு வருவதற்கு முன்பாகவே 1989இல் ஈரோட்டில் இலவச மருத்துவமனை, சென்னை சாலி கிராமத்தில் இலவச மருத்துவமனை, ஆண்டுதோறும் பள்ளி மாணவர்களுக்கு லட்சக்கணக்கில் கல்வி நிதியுதவி, எம்.ஜி.ஆர்.காது கேளாதோர்-வாய் பேசாதோர் பள்ளி,லிட்டில் பிளவர் பார்வையற்றோர் பள்ளிகளுக்கு நன்கொடை, தமிழகம் முழுவதும் 60 இடங்களில் இலவச கணனி பயிற்சி மையம்,இலவச திருமண மண்டபங்கள், ஏராளமான ஏழை ஜோடிகளுக்கு இலவச திருமணம், கப்டன் ஸ்போட்ஸ் அக்கடமி என ஏராளமானோருக்கு உதவி செய்து வந்தார்.குஜராத் பூகம்பம், கார்கில் போர், சுனாமி, கும்பகோணம் பள்ளி தீ விபத்து என பல சோக நிகழ்வுகளுக்கு தனது சொந்த செலவில் நிவாரணங்களை கொடுத்து உதவினார்.அரசியல் கட்சி தொடங்கிய பின்னர் தானே புயல், ஆந்திரா புயல், ஒடிசா வெள்ளம் என பாரபட்சமின்றி முதல் ஆளாக முன்வந்து நிவாரணங்கள் வழங்கினார்.

சினிமாவிலும் அரசியலிலும் கறுப்பு வைரமாக ஜொலித்த விஜயகாந்தின் புகழ் சினிமாவும் அரசியலும் இருக்கும் வரை வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கும். (நி-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வெளிநாடு



# உக்ரைனுக்கு வான் பாதுகாப்பு அமைப்பை வழங்கிய ஜப்பான்

## எச்சரிக்கும் ரஷ்யா

**(மொஸ்கோ) — உக்ரைனுக்கு வான் பாதுகாப்பு அமைப்புகளை வழங்க ஜப்பான் எடுத்துள்ள நடவடிக்கை ரஷ்யா-ஜப்பான் உறவுகளில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என ரஷ்ய வெளிவிவகார அமைச்சு எச்சரித்துள்ளது.**



2022 பெப்ரவரியில் ரஷ்யா பல்லாயிரக் கணக்கான துருப்புக்களை உக்ரைனுக்குள் அனுப் பியதில் இருந்து மொஸ் கோவிற்கும் டோக்கியோவிற்கும் இடையிலான உறவுகள் விரிசலடைந்துள்ளன.

இதனை தொடர்ந்து ஜப்பான் அதன் மேற்கத்தேய நட்பு நாடுகளுடன் இணை ந்து ரஷ்யா மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

இந்நிலையில் உக்ரைனுக்கு வான் பாதுகாப்பு அமைப்பை ஜப்பான் வழங்கியதை விரோத செயலாக கருதும் ரஷ்யா, இதன் காரணமாக ஜப்பான் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என ரஷ்யா எச்சரித்துள்ளது. (நி-6)



## அமெரிக்காவிற்கு புலம்பெயரும் ஆயிரக்கணக்கான மக்கள்

(வோஷிங்டன்)

மத்திய அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த ஏராளமான மக்கள் வறுமை காரணமாக அமெரிக்காவில் தஞ்சமடைவதற்காக நடந்தே மெக்சிக்கோ நாட்டிற்கு சென்றடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

குழந்தைகளின் கல்வி மற்றும் வாழ்வாதார முன்னேற்றத்திற்காக அமெரிக்கா செல்வதாகவும் தினமும் 30 கிலோமீற்றர் தொலைவு நடந்து வருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவுக்கு புலம்பெயர தினமும் சுமார் 8000 பேர் மெக்சிக்கோ வருவதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் அமெரிக்க எல்லையை அடைவதற்கு முன் அவர்களை தடுத்து நிறுத்துவது தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஆண்டனி பிளிங்கன் மெக்சிக்கோ தலைவர்களை சந்தித்து ஆலோசனை நடத்த உள்ளார்.

இதேவேளை சர்வதேச ஊடகங்கள் வெளியிட்டுள்ள தகவலின்படி 2023 ஆம் ஆண்டின் முதல் 11 மாதங்களில் 680,000 புலம்பெயர்ந்தோர் மெக்சிக்கோ வழியாக அமெரிக்காவுக்கு புலம்பெயர சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## அதிக பனிமூட்டத்தால் மாயமான தாஜ்மகால்



(டில்லி)

வடஇந்தியாவில் கடுங்குளிர் நிலவி வருகிறது. பனிமூட்டம் அதிக அளவில் காணப்படுவதால் எங்கு பார்த்தாலும் புகைமூட்டம் போன்று காட்சியளிக்கிறது. எதிரே வரும் வாகனங்கள் தெரியாத அளவிற்கு பனிமூட்டம் தரைப்பகுதியில் படர்ந்துள்ளது.

டில்லி மட்டுமின்றி ராஜஸ்தான், பஞ்சாப், அரியானாவிலும் பனிமூட்டம் அடர்ந்து காணப்படுகிறது. பஞ்சாப்பின் அமிர்சரஸில் எதிரே உள்ளவர்களைப் பார்க்க முடியாத அளவிற்கு பனிமூட்டம் சூழ்ந்துள்ளது.

இந்நிலையில், உலக அதிசயங்களில் ஒன்றாக கருதப்படும் ஆக்ராவில் உள்ள தாஜ்மகாலைச் சுற்றிப் பார்க்க சுற்றுலாப் பயணிகள் குவிந்துள்ளனர்.

அவர்கள் புகைப்படம் எடுக்கும்போது பின்னணியில் தெரியும் தாஜ்மகால் பனி மூட்டத்தால் மறைந்தது கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளனர். (நி-6)

## அவுஸ்திரேலியாவில் சீரற்ற காலநிலை சிறுமி உட்பட 10 பேர் உயிரிழப்பு

(கன்பெரா)

கிழக்கு அவுஸ்திரேலியாவில் கிறிஸ்மஸ் மற்றும் பாக்சிங் நாள் தினத்தன்று கடுமையான இடியுடன் கூடிய மழை பெய்ததில் ஒன்பது வயதுச் சிறுமி உட்பட சுமார் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

விக்டோரியா மற்றும் நியூ சவுத் வேல்ஸ் ஆகிய நகரங்களும் பரவலான வெள்ளம் மற்றும் அழிவுகரமான காற்றினால் பாதிக்கப்பட்டன.

மேலும் இடியுடன் கூடிய மழை பெய்யும் என முன்னறிவிக்கப்பட்டாலும் அடுத்த நாளில் நிலைமை மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜாஸ்பர் சூறாவளியின் போது குயின்ஸ்லாந்தின் சில பகுதிகளை வெள்ளத்தில் மூழ்கடித்த ஒரு வாரத்திற்குப் பிறகு சமீபத்திய புயல்கள் வந்துள்ளன. (நி-6)

## மத்திய பிரதேசத்தில் பற்றியெரிந்த பேருந்து

### 12 பேர் உயிரிழப்பு



(டில்லி)

மத்திய பிரதேச மாநிலத்தில் தனியார் பேருந்தொன்று எதிரே வந்த லொறியொன்றின் மீது மோதி தீப்பற்றி எரிந்ததில் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுமார் 30 பயணிகளுடன் பயணித்த பேருந்தொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. இவ்விபத்தில் 12 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்துள்ளனர் எனவும் 12 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

மண்ட
ஏழை
மணம்,
மி என
செய்து
கார்கில்
காணம்
சோக
சொந்த
கொடு
கட்சி
புயல்,
வள்ளம்
ஆளாக
ள் வழ
லிலும்
ாலித்த
மா வும்
வரலா
நிலை
(நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

### சித்திரை 3,4ஆம் பாதம் நெருக்கடி விலகும்

சகோதரகாரனான செவ்வாயின் நட்சத்திரத்தில் நீங்கள் பிறந்திருந்தாலும் 1.2 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு வித்யாகாரகனான புதன் இராசிநாதனாகவும் 3.4 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு களத்திரக்காரகனான சுக்கிரன் இராசிநாதனாகவும் உள்ளனர்.

சனி பகவானின் சஞ்சார காலத்தில் அவர் சஞ்சரிக்கும் இடத்திற்கேற்ற பலன்களை அவரவரின் கர்ம வினைகளுக்கேற்ப வழங்கக் கூடியவராகிறார். சித்திரை 1.2 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு சனி பகவான் 6 ஆம் இடத்திலும் 3.4 ஆம் பாதத்தினருக்கு 5 ஆம் இடத்திலும் சஞ்சரிக்கிறார். 3.4 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் தேவையற்ற பிரச்சினைகளையும் பூர்வீக சொத்துகளில் வம்பு வழக்குகளையும் பிள்ளைகளால் சில சங்கடங்களையும் பணவரவில் நெருக்கடிகளையும் உண்டாக்குவார்.

**அதிர்ஷ்ட காலம்**

சதயம் நட்சத்திரத்தில் சனி சஞ்சரிக்கும் காலமான மார்ச் 16. 2024 - ஜூன் 19. 2024 வரையிலும் நவ 4. 2024 - பெப் 27. 2025 வரையிலும் சனி பகவான் தாரா பலத்தால் 4 பாதங்களில் பிறந்தவர்களுக்கும் யோகபலன்களை வழங்குவார். முயற்சிகளில் வெற்றியை உண்டாக்குவார். சங்கடங்களை விரட்டுவார். 3.4ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு அஸ்தமனம், வக்கிர காலங்களில் அதற்கு முன்பிருந்த சங்கடங்களை அகற்றி வைப்பார். நன்மைகளை அதிகரிப்பார். போராட்டமான நிலையிலிருந்து விடுதலை வழங்குவார். குடும்பத்தில் மகிழ்ச்சியை அதிகரிக்க வைப்பார்.

**ராகு - கேது சஞ்சாரம்**

ஏப் 26.2025 வரை ராகு மீனத்திலும் கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையில் 2.3 ஆம் பாதத்தினருக்கு ஏப் 26. 2025 வரை நினைத்ததை சாதித்துக் கொள்ளும் நிலையும் புதிய முயற்சிகள் தொடங்கி அதில் வெற்றி அடையும் வாய்ப்பையும் தருவார். ஏப் 26. 2025 இற்கு பிறகு பணவரவில் இருந்த தடைகள் விலகும். பணம் பல வழியிலும் வர ஆரம்பிக்கும். செல்வாக்கு உயரும். முயற்சிகள் யாவும் நிறைவேறும். பட்டம், பதவி, அந்தஸ்து என்ற கனவு நிறைவேறும்.

**குரு சஞ்சாரம்**

3.4 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு ஏப் 30. 2024 வரை பார்வையின் மூலம் அதிகபட்ச யோகத்தை வழங்குவார். அந்தஸ்தையும் செல்வாக்கையும் உண்டாக்குவார். மே 14. 2025 முதல் அதிர்ஷ்ட வாய்ப்புகள் தோன்றும். பணம், பதவி, பட்டம், செல்வாக்கு என்று வாழ்வை வளமாக்குவார்.

**பொதுப்பலன்**

இக்காலத்தில் உறுதியாக இருந்து நினைத்ததை சாதிப்பீர்கள். சூழ்நிலைகளும் உங்களுக்கு சாதகமாக அமையும். தொழில், உத்தியோகம் போன்றவற்றில் எண்ணம் நிறைவேறும். செயல்களில் விவேகம் இருக்கும். வரவேண்டிய பணம் வந்து சேரும். தெய்வீக சிந்தனை அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். தைரியமாக செயற்பட்டு வருவாயை அதிகரிப்பீர்கள்.

**தொழில்**

தொழிலில் எதிர்பார்த்த ஆதாயத்தை அடைவீர்கள். போட்டியாளர்கள் விலகுவர். புதிய முதலீடு ஆதாயம் தரும். பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். அரசு வழியில் இருந்த தடைகள் விலகும். புதிய தொழிற்சாலை, தொழில் தொடங்க நினைத்தவர்களின் எண்ணம் நிறைவேறும்.

**கல்வி**

படிப்பில் கூடுதல் கவனம் செலுத்துவதால் தேர்வில் நீங்கள் எதிர்பார்த்த மதிப்பெண்களைப் பெற முடியும். ஒரு சிலர் கல்வியில் அலட்சியமாக இக்காலத்தில் இருப்பீர்கள். எதிர்காலத்தை நினைத்து, ஆசிரியர்களின் ஆலோசனையை ஏற்று செயற்படுவதால் தேர்வில் வெற்றி உண்டாகும். ஒரு சிலர் வெளிமாநிலம், வெளிநாடு என்று மேற்கல்விக்காக செல்வீர்கள்.

பரிகாரம் -குலதெய்வ வழிபாட்டால் உங்கள் குறை தீரும். நன்மை அதிகரிக்கும்.

### சுவாதி உழைப்பால் உயர்வீர்கள்

யோகக்காரகனான ராகுபகவான், களத்திரக்காரகனான சுக்கிரனின் அம்சத்தில் பிறந்திருக்கும் உங்களுக்கு டிசெ.20. 2023 முதல் உங்கள் இராசிக்கு 5ஆம் இடமான பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார் சனிபகவான்.

கோச்சார ரீதியாக சனிபகவான் எந்த இடத்தில் சஞ்சரிக்கிறாரோ அந்த இடத்திற்குரிய பலன்களை அவரவரின் கர்ம வினைக்கேற்ப அளந்து வழங்குபவர். சனிபகவான் உங்கள் இராசியில்தான் உச்சம் அடைகிறார். அவர் சஞ்சரிக்கும் கும்ப இராசியில் ஆட்சி பெறுகிறார் என்றாலும் இக்காலத்தில் குடும்பத்தில் இடையூறுகள், கணவன், மனைவியிடையே கருத்து வேறுபாடு, தொழிலில் சங்கடம், தடைகள், மேலதிகாரிகளின் விரோதம், நண்பர்கள், உறவினரிடம் கருத்து வேறுபாடு, வீண்செலவு அதிகம், கடன் தொல்லை, பிள்ளைகளால் மனம் வருந்தும் நிலை, கல்வியில் தடங்கல் ஏற்படலாம். குலதெய்வம், குடும்ப தெய்வம் என்று நாடிச்செல்லும் எண்ணம் உண்டாகும்.

இது பொதுவான பலன்தான். ஒருவரின் சுய ஜாதகத்தின் அடிப்படையில் கிரகங்கள் அமர்ந்துள்ள நிலையில், நடக்கும் திசா புத்திக்கேற்ப பலன்களில் மாறுபாடு இருக்கும்.

**அதிர்ஷ்ட காலம்**

சனி பகவான் அவிட்டம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான டிசெ 20. 2023 - பெப் 15. 2024 வரையிலும் பூரட்டாதி நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான மார்ச் 29. 2025 - ஜூலை 2. 2025 மற்றும் நவ 17. 2025 - மார்ச் 6. 2026 வரையிலும் தாரா பலனாலும் அஸ்தமன, வக்கிர காலங்களிலும் 5 ஆம் இட சனி பகவானின் பலன்கள் மாறுபடும். உங்கள் முயற்சிகள் வெற்றியாகும். சங்கடங்களிலிருந்து விடுபட்டு நிம்மதி காண்பீர்கள். ஆதாயம் கிடைக்கும்.

**ராகு - கேது சஞ்சாரம்**

ஏப் 26. 2025 வரை ராகு மீனத்திலும் கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையில் உங்கள் முயற்சிகள் வெற்றியாகும். எதிர்ப்புகள் விலகும். பொருளாதார நிலை உயரும். வியாபாரத்தில் போட்டியாளர்கள் விலகுவர். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். ஆரோக்கியம் சீராகும். ஏப் 26. 2025 முதல் ராகு கும்பத்திலும் கேது சிம்மத்திலும் சஞ்சரிக்கும் நிலையில் பிரச்சினைகள் ஒவ்வொன்றாக விலகும். எதிர்பார்த்த வருமானம் வரும். வியாபாரம், தொழிலில் லாபம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். அரசியல்வாதிகள் எதிர்பார்த்த பொறுப்பு, பதவியை அடைவீர்கள். புதிய சொத்து சேர்க்கை உண்டாகும்.

**குரு சஞ்சாரம்**

ஏப் 30. 2024 வரை சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவால் சங்கடம் விலகும். செல்வாக்கு உயரும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடந்தேறும். பணவரவு அதிகரிக்கும். மே 1, 2024 - மே 13. 2025 இல் அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவால் முன்பிருந்த நிலைகளில் மாற்றம் உண்டாகும். நெருக்கடி அதிகரிக்கும். முயற்சி இழுபறியாகும். வரவுகள் எதிர்பார்த்த அளவிற்கு இருக்காது. மே 14. 2025 முதல் பாக்ய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவால் செல்வாக்கு உயரும். பட்டம், பதவி, பொறுப்பு என எதிர்பார்ப்புகள் நிறைவேறும். சமூகத்தில் அந்தஸ்து அதிகரிக்கும். சொத்துச் சேர்க்கை உண்டாகும். சிலர் கோயிலுக்கு கும்பாபிஷேகம் செய்து வேண்டுதலை நிறைவேற்றுவீர்கள். இக்காலம் உங்களுக்கு யோக காலமாக இருக்கும்.

**பொதுப்பலன்**

சனி பகவான் உங்கள் இராசிக்கு 5ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் நிலையில் ராகு - கேது சஞ்சாரங்களும் குருவின் 9, 11 ஆம் இட சஞ்சார காலங்களும் நீண்ட நாளாக இருந்த பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். பிள்ளைகளால் சங்கடம் ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் சக்தி இருக்கும். உங்கள் தேவைகள் தக்க சமயத்தில் பூர்த்தியாகும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடக்கும். முக்கிய முடிவுகளை எடுக்கும் போது கவனமாக செயற்படுவது நல்லது. பூர்வீகச் சொத்து விவகாரங்களில் பிரச்சினைகள் தோன்றினாலும் எதிர்பார்த்த நன்மையை அடைவீர்கள்.

**தொழில்**

பூர்வ புண்ணிய பலன் என்பது ஒவ்வொருவருக்கும் முக்கியமானது. சனிபகவான் இக்காலத்தில் அங்கே சஞ்சரிப்பதுடன் உங்களுக்கு பூர்வ புண்ணியாதிபதியும் அவர்தான் என்பதால் உங்கள் கர்ம வினைக்கேற்ப பலன்களை வழங்குவார். இக்காலத்தில் தொழில், வியாபாரத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியதாக இருக்கும். வியாபாரத்தை விரிவு செய்யும் போது கவனம் தேவை. சினிமா, சின்னத்திரை, நவீன சாதனங்கள், டிராவல்ஸ், கம்யூட்டர், கமிஷன் ஏஜன்சி போன்றவற்றில் ஈடுபடுவோர் முன்னேற்றம் காண்பர்.




**20.12.2023-06.03.2026**

**கல்வி**

இக்காலத்தில் படிப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியதாக இருக்கும். ஆசிரியர்களின் ஆலோசனையால் எதிர்பார்த்த மதிப்பெண்களைப் பெறுவீர்கள். பொதுத் தேர்வில் உங்களால் வெற்றி பெற முடியும்.

### விசாகம் 1,2,3 ஆம் பாதம் நீண்டநாள் எண்ணம் நிறைவேறும்

தனகாரகனான குருவின் நட்சத்திரத்தில் பிறந்திருந்தாலும் 1.2.3 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு களத்திரக்காரகனான சுக்கிரன் ராசிநாதனாகவும் 4 ஆம்பாதத்தில் பிறந்தவர்களுக்கு சகோதரகாரகனான செவ்வாய் இராசிநாதனாகவும் உள்ளனர். கோச்சார ரீதியாக சனிபகவான் சஞ்சரிக்கும் காலங்களில் பலன்களை அவரவர் கர்ம வினைக்கேற்ப தரக் கூடியவராகிறார்.

விசாகம் 1.2.3ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு சனிபகவான் 5ஆம் இடத்திலும் 4ஆம் பாதத்தினருக்கு 4 ஆம் இடத்திலும் சஞ்சரிக்கிறார். இதனால் 1.2.3ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு வாழ்க்கையில் பல்வேறு இடையூறுகள் தோன்றி அதையெல்லாம் சந்திக்க வேண்டியதாக இருக்கும். குறிப்பாக குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்பட்டு அதன் வழியாக குழப்பம் அதிகரிக்கும். கணவன் -மனைவியிடையே பிரச்சினைகள் தோன்றும். பூர்வீக சொத்துகளில் வழக்கு, வில்லங்கம் போன்றவை ஏற்படுவதுடன் பிள்ளைகளாலும் சங்கடங்களை அடைய வேண்டும் என்பது பொதுவானவிதி.

**அதிர்ஷ்ட காலம்**

சனி பகவான் அவிட்டம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான டிசெ 20. 2023 - பெப் 15. 2024 வரையிலும், சதயம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலமான மார்ச் 16. 2024 - ஜூன் 19. 2024 மற்றும் நவ 4. 2024 - பெப் 27. 2025 வரையிலும் தாரா பலனாலும் அஸ்தமன, வக்கிர காலங்களிலும் 4 ஆம் பாதங்களில் பிறந்தவர்களையும் சங்கடங்களில் இருந்து பாதுகாப்பார். முயற்சிகளை வெற்றியாக்குவார். பணவரவில் இருந்த தடைகளை அகற்றுவார். யோகமான பலன்களை வழங்கி முன்னேற்றத்தை உண்டாக்குவார்.

**ராகு - கேது சஞ்சாரம்**

ஏப் 26.2025 வரை ராகு மீனத்திலும் கேது கன்னியிலும் சஞ்சரிக்கும் நிலையில் 1.2.3 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு 6 ஆம் இட ராகு நன்மைகளை அதிகரிப்பார். வழக்குகளில் வெற்றியை உண்டாக்குவார். உடல் நிலையில் இருந்த சங்கடங்களை அகற்றுவார். எதிர்ப்புகளை விலக்கி வைப்பார்.

**குரு சஞ்சாரம்**

1.2.3 ஆம் பாதங்களில் பிறந்தவர்களுக்கு ஏப் 30. 2024 வரை சப்தம ஸ்தானத்திலும் மே 1. 2024 - மே 13. 2025 வரை அஷ்டம ஸ்தானத்திலும் மே 14. 2025 முதல் பாக்ய ஸ்தானத்திலும் சஞ்சரிக்க இருக்கிறார் குருபகவான். சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் காலத்தில் குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடைபெற அருள்புரிவார். வாழ்வில் முன்னேற்றத்தை உண்டாக்குவார். புதிய வீடு, வாகனம் என்ற கனவுகளை நினைவாக்குவார். பாக்ய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் காலத்தில் உங்கள் நிலையில் முன்னேற்றத்தையும் அந்தஸ்தையும் பொன், பொருள் சேர்க்கையையும் உண்டாக்குவார். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த இடமாற்றம், பதவி உயர்வு வழங்குவார். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கை அதிகரிப்பார்.

**பொதுப்பலன்**

சனி பகவானின் சஞ்சாரம் சாதகமாக இல்லை என்றாலும் ராகு, கேது, குரு பகவானின் சஞ்சாரங்கள் உங்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும். வாழ்க்கையில் முன்னேற்றத்தை உண்டாக்கும். சங்கடங்களில் இருந்து உங்களை விடுவிக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயத்தை ஏற்படுத்தும். பொன், பொருள், பூமி, வாகன சேர்க்கை ஏற்படும். புதிய முயற்சிகளில் வெற்றியை ஏற்படுத்தும்.

**தொழில்**

தொழிலில் போட்டி, பிரச்சினைகள் என்று இருந்தாலும் அதை சமாளித்து வெற்றி பெறுவீர்கள். வருமானம் தரும் தொழில்களை கண்டறிந்து அதில் உங்கள் முயற்சியை மேற்கொள்வீர்கள். உங்கள் முயற்சிகள் லாபமாகும். மற்றவர்களால் சங்கடங்கள் ஏற்படும் என்பதால் இக்காலத்தில் உங்களை மட்டுமே நம்பி நடத்தப்படும் தொழில் ஆதாயத்தை அளிக்கும்.

**பணியாளர்கள்**

அலுவலகத்தில் இருந்த பிரச்சினைகள் முடிவிற்கு வரும். உழைப்பு அதிகரிக்கும் என்றாலும் அதன் காரணமாக செல்வாக்கும் உயரும். சிலருக்கு விரும்பிய இடமாற்றம், ஊர் மாற்றம் ஏற்படும். தனியார் நிறுவன பணியாளர்களுக்கு செல்வாக்கு அதிகரிக்கும். உடன் பணிபுரிபவர்கள் ஆதரவாக இருப்பர். சிலருக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும்.

**கல்வி**

படிப்பில் சில தடைகள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. மற்ற விடயங்களில் கவனம் செலுத்தாமல் ஆசிரியர்களின் ஆலோசனைகளை கேட்டு செயற்பட்டால் தேர்வில் உங்கள் முயற்சி வெற்றியாகும். எதிர்பார்த்த மதிப்பெண் கிடைக்கும். விரும்பிய கல்லூரியில் நினைத்த பாடத்தில் சேரும் வாய்ப்புண்டாகும்.

**உடல்நிலை**

நோய்களால் சங்கடப்பட்ட நிலை மாறும். குணமாகாது என நினைத்த நோய்களும் இக்காலத்தில் மருத்துவத்திற்கு கட்டுப்படும். பரம்பரை நோய்க்கு நவீன மருத்துவத்தால் தீர்வு கிடைக்கும். மூச்சுத்திணறல் இருப்பவர்கள் தொடர்ந்து தங்கள் உடல்நிலையில் கவனம் செலுத்தி வருவதும் சிகிச்சை பெறுவதும் இக்காலத்தில் நன்மை தரும்.

**குடும்பம்**

குடும்ப நிலையில் முன்னேற்றம் உண்டாகும். நீண்டநாள் கனவுகள் நிறைவேறும். தம்பதிகளுக்குள் ஒற்றுமை அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்வி, திருமண முயற்சியில் ஈடுபடுவீர்கள். சிலருக்கு புதிய சொத்துச் சேர்க்கை உண்டாகும். பொன், பொருள் சேர்க்கை அதிகரிக்கும். பாதியில் நின்ற வீடு கட்டும் பணி தொடரும். வெளி வட்டாரத்தில் உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும்.

பரிகாரம் -முருகனை வழிபட வாழ்வு வளமாகும். நாளும் நலம் சேரும்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிவடைந்த வயல் நிலங்களுக்கான இழப்பீட்டினை பெற்றுத் தாருங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

(நெளுக்குளம்)


**வெள்ளப் பாதிப்பால் அழிவடைந்த வயல் நிலங்களுக்கான இழப் பீட்டினை பெற்றுத்தரக் கோரி அரசாங்கத்திடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**



வடக்கு,கிழக்கு எங்கிலும் அண்மையில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தத்தினால் முல்லைத்தீவு மாவட்டம் பாண்டியன் குளம், துணுக்காய் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

வவுனிக்குள நீர்ப்பாசன திட்டத்தின் கீழான பாண்டியன் குளம் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட பகுதிகளில் விவசாயிகள் வெள்ளத்திற்கு முதல் மடிச்சு கட்டி மற்றும் கபிலநிற தத்தி போன்ற நோய்களின் தாக்கங்கள் அதிகரித்து காணப்பட்டாலும், அவற்றிலிருந்து காப்பாற்றி வயல்நிலங்களை பராமரித்த போதும் வெள்ளத்தினால் தற்போது அவை அழிவடைந்திருப்பதாகவும் இவ் அனர்த்த பாதிப்புக்கு இந்த அரசாங்கம் தமக் கான இழப்பீட்டினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் தெரிவித்தனர். (நி-6-299)

# புதுமுறிப்பு மீன்குஞ்சு உற்பத்தி நிலையத்திற்கு அமைச்சர் விஜயம்



(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தின் புதுமுறிப்பு நன்னீர் மீன்குஞ்சுகள் உற்பத்தி நிலையத்திற்கு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நேற்று கண்காணிப்பு விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார்.

கிளிநொச்சி புதுமுறிப்பு நன்னீர் மீன் குஞ்சு உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ள நிலையில், குறித்த பகுதிக்கான கண்காணிப்பு விஜயத்தினை அமைச்சர் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது குறித்த நிலையத்தின் முன்னேற்றம் குறித்து ஆராய்ந்ததுடன், உற்பத்தியாளர்களுடன் அதன் முன்னேற்ற செயற்பாடுகள் குறித்து கேட்டறிந்து கொண்டார். (நி-6-350)

# திருவாசகம் முற்றோதல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஜெயந்தி நகர் மகாதேவ ஆச்சிரமத்தில் நாளை சனிக்கிழமை காலை 7 மணிமுதல் திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது. (நி-6)

# வவு.வர்த்தக நிலையங்களிற்கு எதிராக 22 லட்சம் தண்டம் விதிப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் 2023 ஆம் ஆண்டில் வர்த்தக நிலையங்களிற்கு எதிராக 22 இலட்சத்து நாற்பதாயிரத்து ஐந்நூறு ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட பொறுப்பதிகாரி சத்துர வன்னி நாயக்க தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் கடந்த 2023 ஆம் ஆண்டில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புக்கள் மற்றும் சோதனை நடவடிக்கைகளின் போது 771 வியாபார நிலையங்கள், உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் நிறுவன முகவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6-250)

# அதிகூடிய மழைவீழ்ச்சி பெறப்பட்டதால் 54 குளங்கள் நீர் கொள்ளளவை பெற்றுள்ளன

## வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களம்

(கண்டாவளை)

வடமாகாணத்தில் வானிலை அவதானிப்பு நிலையத்தின் எதிர்வு கூறலை விடவும் அதிகூடிய மழை வீழ்ச்சி கிடைக்கப்பெற்றுள்ளதுடன் மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் உள்ள 54 வரையான பாரிய மற்றும் நடுத்தர குளங்கள் முழுமையான நீர்கொள்ளளவை பெற்றுள்ளதாக வடமாகான நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் நிலவி வருகின்ற சீரற்ற காலநிலை காரணமாக அதிகளவான மழை வீழ்ச்சி கிடைக்கப்பட்டுள்ளதுடன் வடமாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் உள்ள 54 வரையான பாரிய மற்றும் நடுத்தர குளங்கள் முழுமையான நீர்கொள்ளளவையடைந்து மேலதிக நீர் வெளியேற்றி வருகின்றது.

மேற்படி குளங்களின் கீழ் 21 இடங்களில் மழைமானிகள் பொருத்தப்பட்டு மழைக் காலங்களில் ஆறுகளின் நீர்வரத்துக்களும் கண்காணிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6-315)

# கிளிநொச்சியில் இடம்பெற்ற வர்ண இரவு விருது வழங்கல்




(முறிகண்டி)


கிளிநொச்சி மாவட்டத்தில் விளையாட்டுத் துறையில் சாதனை புரிந்த வீர, வீராங்கனைகளை கௌரவிக்கும்வர்ண இரவு விருது நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில், மாவட்ட செயலக திறன் விருத்தி மண்டபத்தில் நடைபெற்றது.

விளையாட்டுத் துறையில் தேசிய மட்ட போட்டியில் கலந்து கொண்டு சாதனை படைத்த 12, மாகாண போட்டிகளில் கலந்து கொண்டு சாதனை படைத்த 204 வீர, வீராங்கனைகள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் 16 பேரும் உள்ளிட்ட மொத்தமாக 232 பேருக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந் நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராஜா, கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் சி.கமலறாஜன், கிளிநொச்சி வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் அ.க சிவனருள்ராஜா, வட மாகாண விளையாட்டு திணைக்கள முன்னாள் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை, வட மாகாண விளையாட்டு திணைக்கள முன்னாள் உதவிப் பணிப்பாளர் கனகராஜா, ஆகியோர் கலந்து கொண்டனர். (நி-6-100-316)

# கால்நடைகளின் நடமாட்டத்தால் வீதி விபத்துக்கள் ஏற்படும் அபாயம்



(அக்கராயன்)

முதன்மை வீதிகளுக்கு அருகில் மேய்ச்சல் தரவைகளில் ஈடுபடும் கால்நடைகளின் நடமாட்டங்களால் வீதி விபத்துக்கள் ஏற்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏ-9 சாலைகளில் குறித்த கால்நடைகளில் நடமாட்டம் அதிகமாக காணப்படுவதால் விபத்துக்கள் ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளதுடன் கால் நடைகளும் விபத்துக்குள்ளாகின்றன.

கால்நடை வளர்ப்பாளர்கள் முதன்மை வீதிகளுக்கு அருகில் கால்நடைகளை நடத்திச் செல்லும்போது அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார் தெரிவித்தனர். (நி-6-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர்

366





தீபத்தை ஒளியும், மலரை மணமும், உடம்பை நிழலும் பிரியாததுபோல் வானதி தேவியும் இளைய பிராட்டியைப் பிரிவது கிடையாது"

"அடடே! இந்தப் பிள்ளை வெகு புத்திசாலி! திருமலை! இவனை நம் பொக்கிஷ சாலைக்கு அழைத்துச் சென்று வேண்டிய ஆடை ஆபரணங்களைக் கொடுத்து அழைத்துப் போ!"

"ஐயா! எல்லாம் தற்சமயம் பொக்கிஷத்திலேயே இருக்கட்டும், திரும்பிப் போகும்போது நான் வாங்கிக்கொண்டு போகிறேன்."

"தம்பி! எங்கள் வீட்டுப் பெண்ணைப்பற்றி, வானதியைப் பற்றி, இளைய பிராட்டி எனக்குச் செய்தி ஒன்றும் அனுப்பவில்லையா-?"

"சேனாதிபதி! தங்களிடம் நான் பொய் சொல்ல விரும்ப வில்லை."

"யாரிடமும் எப்பொழுதும் பொய் சொல்ல வேண்டாம், தம்பி!"

"இந்த வீர வைஷ்ணவர் விஷயத்தில் மட்டும் தயவு செய்து விலக்கு அளிக்க வேண்டும். சேநாதிபதி இவரிடம் உண்மை சொன்னால் என் தலை வெடித்துப் போய்விடும்."

"வேண்டாம், வேண்டாம்! இளைய பிராட்டி எனக்கு ஒன்றும் செய்தி அனுப்ப வில்லையாக்கும்!"

"தங்களுக்குச் செய்தி அனுப்பவில்லை. ஆனால்."

"ஆனால், என்ன?"

"யாருக்கு அனுப்ப வேண்டுமோ அவருக்கு அனுப்பியிருக்கிறார்கள். வானதி தேவியைப் பற்றி இளவரசரிடம் நேரில் சில செய்திகளைச் சொல்லும்படி பணித்திருக்கிறார்கள்."

"உன்னைப் போன்ற புத்திசாலிப் பிள்ளையை நான் பார்த்ததேயில்லை!" என்று கூறிச் சேநாதிபதி பெரிய வேளார் வந்தியத்தேவனை மார்போடு அணைத்துக் கொண்டார். பின்னர், "சரி இனி வீண் பொழுது போக்க வேண்டாம் புறப்படுங்கள்!" என்று சொன்னார்.

"ஐயா! இந்த வீர வைஷ்ணவர் என்னோடு அவசியம் வரத்தான் வேணுமா? இவர் இல்லாமல் நான் தனியே போகக் கூடாதா?"

"இவர் வருவதில் உனக்கு என்ன ஆட்சேபம்?"

"எனக்கு ஆட்சேபம் இல்லை. என் இடையில் செருகியுள்ள கத்தி சுத்த வீரசைவக் கத்தி. அது 'வீர வைஷ்ணவ இரத்தம் வேண்டும்' என்று வெகு நாளாகக் கேட்டுக்கொண்டிருக்கிறது. என்னை மீறி அது வெளிக் கிளம்பிவிட்டால் இவர் பாடு ஆபத்தாய்ப் போய் விடும் என்று பார்க்கிறேன்."

"அப்படியானால் அந்தக் கத்தியை இங்கே விட்டு விட்டு வேறு கத்தி எடுத்துக்கொண்டு போ! திருமலை உன்னோடு வராவிட்டால் நீ இளவரசரைக் கண்டுபிடிக்க முடியாது. அவர் இருக்குமிடமே யாருக்கும் தெரியாது. மேலும் இளவரசரிடம் கொடுப்பதற்கு இவனும் ஒரு முக்கியமான ஓலை கொண்டு வருகிறான். ஆகையால் இரண்டு பேருமாகச் சேர்ந்து போவதே நல்லது! வழியில் ஒருவரோடொருவர் சண்டை பிடித்துக் கொண்டு காரியத்தைக் கெடுத்து விடாதீர்கள்!"

இவ்விதம் சொல்லிவிட்டுப் பெரிய வேளார் மறுபடியும் வந்தியத்தேவனை அருகில் அழைத்து அவன் காதோடு இரகசியமாகச் சொன்னார்.

"தம்பி! இவனால் உன் காரியத்துக்கு இடைஞ்சல் ஒன்றும் நேராது. ஆனாலும் ஜாக்கிரதையாகவே இரு! இளவரசரிடம் இவன் என்ன செய்தி சொல்லுகிறான் என்பதைத் தெரிந்து வந்து என்னிடம் சொல்லு!"

ஆழ்வார்க்கடியானைத் தனக்கு ஒற்றனாகப் பின்னோடு அனுப்புகிறார்கள் என்று முதலில் வந்தியத்தேவன் எண்ணியிருந்தான். இப்போது அவனுக்குத் தான் ஒற்றன் என்று ஏற்பட்டது. இந்த நிலைமை வந்தியத்தேவனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

வந்தியத்தேவன் ஆழ்வார்க்கடியானும் இரண்டு வீரர்கள் துணையுடன் அன்றிரவே புறப்பட்டார்கள். பிரயாணம் தொடங்கி இரண்டு நாள் கிழக்கு நோக்கிச் சென்றார்கள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பீர்பாலின் புத்திசாலித்தனம்



பீர்பாலின் நகைச் சுவையான பேச்சுகளை அக்பர் மட்டுமன்றி தர்பாரில் பலரும் ரசித்தனர். ஆனால், சிலருக்கு மட்டும் பீர்பாலுக்குக் கிடைத்த பாராட்டுகள் பொறாமையை அளித்தன. ஒவ்வொரு முறையும் அக்பர் மனந்திறந்து பீர்பாலைப் பாராட்டுகையில், அவர்களுடைய மனம் பற்றியெரிந்தது.

எப் படியாவது பீர்பாலை மட்டம் தட்ட வேண்டும் என்றும், அவமானப்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் ஆவலாயிருந்தனர். அவர்களில் சைதான்கான் முதன்மையானவர்.

சைதான்கான் தன்னைப்போலவே பீர்பாலின் மீது பொறாமை கொண்ட மற்றவர்களுடன் சேர்ந்து அவரை அவமானப்படுத்தத் திட்டங்கள் தீட்டினார். அவற்றுள் ஒரு திட்டம் அனைவருக்கும் பிடித்துப் போனதால் அதை செயலாற்ற முடிவு செய்தனர்.

மறுநாள் வழக்கம் போல் தர்பார் கூடியது. முக்கியமான அலுவல்கள் முடிந்தபின், அக்பர் சிம்மாசனத்தில் நன்றாக சாய்ந்து கொண்டு அமர்ந்தார். பொதுவாக அந்த சமயத்தில்தான் அவர் சபையோரிடமிருந்து அறிவுரைகள், யோசனைகள் ஆகியவற்றைக் கேட்பது வழக்கம்.

உடனே சைதான்கான் எழுந்து நின்று அக்பரை வணங்க, அவரும் பேசுவதற்கு அனுமதி தந்தார். உடனே சைதான்கான் பீர்பாலைப் பார்த்துக் கொண்டே, "சக்கரவர்த்தி! நமது பீர்பாலைப் போல் புத்திசாலி யாருமே இல்லை. அவருக்கு அபார மூளை!" என்று பீர்பாலுக்கு ஐஸ் வைத்தார்.

"உங்களுக்கு மட்டும் புத்தி குறைவா? நீங்களும் தான் புத்திசாலி!" என்றார் பீர்பால்.

"என்ன இருந்தாலும் உங்களுடைய புத்திசாலித்தனத்திற்கு ஈடாகுமா" என்ற சைதான்கான் சக்கரவர்த்தியை நோக்கி விஷமமாக, "சக்கரவர்த்தி! பீர்பாலே இத்தனை புத்திசாலியாக இருந்தால் அவருடைய தகப்பனார் இன்னும் எத்தனை புத்திசாலியாக இருப்பார்?" என்றார்.

அதைக் கேட்டு நிமிர்ந்து உட்கார்ந்த அக்பர், "அட, ஆமாம்! இது ஏன் எனக்குத் தோன்றவில்லை?" என்றார்.

"அப்படியானால் உடனே பீர்பாலின் தகப்பனாரை தர்பாருக்கு வரவழைப்போம் பிரபு!" என்றார் சைதான்கான். தன்னுடைய திட்டம் இத்தனை சீக்கிரம் பலிக்கும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. அதைக் கேட்ட பீர்பால் திடுக்கிட்டார். சைதான்கான் ஆரம்பத்தில் இருந்தே தன்னைக் கவிழ்ப்பதற்காகத்தான் திட்டம் போட்டிருக்கிறான் என்று உணர்ந்தார். ஆனால் இவ்வளவு சாமர்த்தியமான திட்டத்தை எதிர்பார்க்கவில்லை.

பீர்பாலின் தகப்பனார் அவ்வளவாகப் படிப்பறிவு இல்லாதவர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளிலிருந்து கற்றுக்கொண்டவர்களை விட கற்றுக்கொண்டதை வைத்து தவறு செய்தவர்களே அதிகம்.

–ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேவை ஏற்படும்போது மட்டுமே இனப் பிரச்சினை பற்றிய பேச்சு

இலங்கை ஆட்சியாளர்கள் எவரும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணமாட்டார்கள் என்பது சர்வநிச்சயம்.

எனினும் தங்களின் காலத்தை ஓட்டுவதற்காக ஆட்சியாளர்கள் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பார்கள் என்பது போல நம் தமிழ் அரசியல் தரப்புகள் நடிக்கின்றன.

அதாவது ஆட்சியாளர்கள் எங்களின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு தரமாட்டார்கள் என்பது தமிழ் அரசியல்வாதிகளுக்கு நன்கு தெரியும்.

இருந்தும் அந்த உண்மையை வெளிப்படுத்தினால், அடுத்த கட்ட நடவடிக்கை என்ன? என்ற கேள்வி எழும்.

ஆம், உள்நாட்டில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுகின்ற முயற்சிகள் ஏதுமில்லை எனும்போது, அதன் அடுத்த கட்ட நடவடிக்கை சர்வதேச நாடுகளிடமும் ஐ.நா சபையிடமும் முறையிடுவதுதான் ஒரே வழியாக இருக்கும்.

இருந்தும் அதனைச் செய்வதற்கு நம் தமிழ் அரசியல் தலைமைகள் தயாரில்லை.

அவர்களைப் பொறுத்தவரை அவர்கள் கொழும்பை வாழ்விடமாகக் கொண்டவர்கள்.

எனவே கொழும்பை வாழ்விடமாகக் கொண்ட தமிழ் அரசியல் தலைமை என்பது ஒருபோதும் அரசாங்கத்துக்கு எதிராகச் செயற்படமாட்டாது.

அவர்கள் அரசாங்கத்தை எதிர்ப்பதுபோல தமிழ் மக்களுக்குக் காட்டிக் கொள்வார்களேயன்றி, மற்றும்படி இந்த நாட்டின் ஆட்சியில் யார் இருந்தாலும் அவர்களுடன் மறைமுகமாக நல் உறவைப் பேணிக் கொள்வார்கள் என்பதுதான் உண்மை.

இதற்கும் பல சான்றாதாரங்களை சுட்டிக் காட்ட முடியும்.

இருந்தும் எம் அனைவருக்கும் தெரிந்த உண்மையை நாம் மீள்பரிசோதனைக்குட்படுத்துவதால், ஆகப் போவது எதுவுமில்லை.

ஆகையால் இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றி நம் தமிழ் அரசியல் தரப்புகள் பேசுகின்றார்களாயின், அவர்கள் தங்களின் சுய அரசியலுக்கு அடிக்கட்டுப் பசளை இடுகிறார்கள் என்று பொருள் கொள்வதுதான் பொருத்தம்.

இதேபோன்று இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமெனக் கூறுகிறார்களாயின், அங்கு அவர்களுக்கு அது பற்றிய ஒரு தேவை ஏற்பட்டுள்ளதென்று புரிந்து கொள்ள வேண்டும்.

ஆம், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து நிதி உதவி பெறுதல், ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடர் ஆரம்பமாகின்ற நேரத்தில் மற்றும் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் அல்லது சர்வதேச அமைப்புகளின் உறுப்பினர்கள் இலங்கைக்கு வருகை தந்து ஆட்சியாளர்களுடன் கலந்துரையாட இருக்கின்ற சந்தர்ப்பங்களில், இனப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கோசத்தை ஆட்சித் தரப்பு எழுப்பும்.

மற்றும்படி இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்பது பற்றி அவர்கள் ஒருபோதும் சிந்திக்க மாட்டார்கள். இதுவே சத்தியமான உண்மை.

# யாழில் போதைப் பொருட்களுடன் யார் தொடர்புபட்டாலும் நடவடிக்கை

### பொலிஸாரை எச்சரித்த அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

யாழில் போதை வஸ்துடன் யார் சம்பந்தப்பட்டாலும் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொலிஸாரை கடுமையாக எச்சரித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் போதைவஸ்து விடயம் தொடர்பில் கருத்துரைக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன் போது அவர் மேலும் கூறுகையில்,

அண்மையில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு போதைப் பொருள் கடத்த முயன்ற ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரது யாழ்ப்பாணத்தில் உள்ள வீட்டில் பொலிஸார் பரிசோதனையிட சென்றபோது அங்கே பரிசோதனையிட அனுமதி வழங்கப்படாமை தொடர்பில் கேள்வி எழுப்பிய அமைச்சர்,அவ்வாறு நீங்கள் செயற்பட முடியாது. எவராக இருந்தாலும் நீங்கள் உரிய நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என தெரிவித்தார்.

இதேநேரம் வடக்கு மாகாணத்தில் போதைவஸ்துடன் தொடர்புடையோர் யாருடைய செல்வாக்கினையும், பயன்படுத்த முடியாது. யாராக இருந்தாலும் கட்டாயமாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். பொலிஸார் அந்த விடயத்தில் தவறிழைக்கக்கூடாது.

இதேநேரம் என்னுடைய பெயரை பாவித்தால் கூட நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வவுனியாவில் 131 பேருக்கு காணி ஆவணங்கள் வழங்கல்

(வவுனியா)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக் கருவில், காணி அமைச்சர் ஹரின் பெர்ணாண்டோவின் நெறிப்படுத்தலின் கீழ் வவுனியாவில் 131 பேருக்கான காணி ஆவணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

வவுனியா பிரதேச செயலகப்பிரிவிலுள்ள கணேசபுரம், மணிபுரம், ஆசிகுளம், சமயபுரம் கிராமங்கள் உட்பட பல கிராம மக்களுக்கு உறுதிப் பத்திரங்கள் வழ்ங்கப்பட்டன.

வவுனியா பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலாளர் நா.கமலதாசன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்தி குழு தலைவருமான கு.திலீபன், உதவி பிரதேச செயலாளர், காணிஉத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ம-7,250)

## கேக் விற்பனை வீழ்ச்சி

(கொழும்பு)

இம்முறை பண்டிகைக் காலத்தில் கேக் விற்பனை பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக அகில இலங்கை வெதுப்பக உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் என். கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த ஆண்டு நத்தார் பண்டிகைக் காலத்தில் கேக் விற்பனை 25 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## சிறுவர்கள் மத்தியில் பரவும் நோய்கள்

### பொதுமக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

தற்போதைய நாட்களில் சிறுவர்களின் மத்தியில் பல்வேறுப்பட்ட சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்கள் பரவலடைந்து வருவதாக சிறுவர் நோய்கள் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

பரிசோதனைக்கு உட்படுத்திய சிறுவர்களுக்கு இடையில் அநேகமானவர்களுக்கு இன்புளுவென்சா வைரஸ் தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் கொரோனா நோயாளர்கள் இருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர்களின் மத்தியில் வைரஸினால் ஏற்படும் காய்ச்சல் நிலைமை அதிகரித்துள்ளது.

அநேகமாக நோய் அறிகுறிகளாக காய்ச்சல், இருமல், சளி, வாந்தி, தலைவலி போன்றவை அடையாளம் காணப்பட்டுள்ளன.

பரிசோதனைக்கு உட்படுத்தியபோது அநேகமான காய்ச்சல் நிலைமைகள் இன்புளுவென்சா ஏ மற்றும் பீ என்பவற்றால் தோற்றம் பெற்றவையாக இருந்தன.

இதற்கு மேலதிக, ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் இவ்வாறான நிலைமையை அவதானிக்கவில்லை. ஆனால் சிறுவர்கள் இருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. அநேகமானவர்களுக்கு இன்புளுவென்சா பரவலடைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## சட்டவிரோத மீன்பிடியில் அறவிடப்படும் தண்டத்தை

### மீனவர்களின் நலன்புரியில் பயன்படுத்த கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுவோரிடம் அறவிடப்படும் தண்டப் பணத்தை மீனவர்களின் நலன்புரி செயற்பாடுகளுக்கு பயன்படுத்த வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவனந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் அமைச்சர் டக்ளஸ்தேவனந்தா, வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் ஆகியோரின் தலைமையில் மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது. இதன்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறித்த கூட்டத்தில் யாழ் மாவட்ட கடற்தொழிலாளர்கள் எதிர்நோக்கியுள்ள சிக்கல்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளதுடன் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் உள்ளூர் மீனவர்கள் பாதிக்கப்படுகின்றமை குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (ம-7)

### எதிர்வரும் திங்கட்கிழமை

## புத்தாண்டின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம்

(கொழும்பு)

புத்தாண்டின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் எதிர்வரும் திங்கள் கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

இதன் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதிய ஆண்டுக்கான வேலைத் திட்டங்களை அமைச்சரவையில் சமர்பிக்க உள்ளதாக தெரியவருகிறது.

இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துக்கொள்ளுமாறு சகல அமைச்சர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ள அமைச்சர்கள் இந்த கூட்டத்தில் கலந்துக்கொள்வதற்காக முதல் நாளே இலங்கை திரும்ப உள்ளதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆண்டின் இறுதி அமைச்சரவைக்கூட்டம் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்றது.

நத்தார் விடுமுறை காரணமாக கடந்த வாரம் அமைச்சரவை கூடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை வவுனியா பிரதேசத்தில்** அரசன் அரிசி ஆலை எனும் இடத்தில் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மது பாவனையால் நாட்டுக்கு பாரிய நட்டம்

(கொழும்பு)

இலங்கையில் மதுபான பயன்பாடு காரணமாக நாட்டின் பொருளாதாரத்திற்கு 237 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதாரம் மற்றும் பொருளாதார ரீதியாக இவ்வாறு நட்டம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை மதுபான மற்றும் போதைப் பொருள் தகவல் மத்திய நிலையத்தின் ஆலோசகர் புபுது சுமனசேகர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

மதுபான பயன்பாட்டினால் ஏற்பட்ட வீதி விபத்துக்கள், கைத்தொழிற்சாலைகளில் உற்பத்தி வீழ்ச்சி, வீட்டுத் தலைவர்கள் அகால மரணமடைதல், மருந்துப் பொருட்களுக்கு அதிகளவில் செலவிட நேரிடுதல் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையில் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டிலும் மதுபான விற்பனையின் மூலம் அரசாங்கத்திற்கு கிடைக்கும் பொருளாதார நலன்களை விடவும் மதுபான பயன்பாட்டினால் ஏற்படக்கூடிய சுகாதார கேடுகளுக்காக செலவிட நேரிட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டில் மதுபான விற்பனையின் மூலம், மதுவரித் திணைக்களம் 165.2 பில்லியன் ரூபாய் வருமானம் ஈட்டியுள்ளது.

எனினும் மதுபான பயன்பாட்டினால் ஏற்பட்ட சுகாதார மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்காக இந்த வருமானத்தை விடவும் கூடுதல் தொகை செலவிடப்பட்டுள்ளது.

இலங்கையில் வயது வந்த சனத்தொகையில் 40 வீதமான ஆண்கள் மதுபானம் அருந்துவதாகத் தெரிவித்துள்ளார். (நி-6)

# பேராதனையில் பாரிய மண்சரிவு

(கண்டி)

லுணுகல - பிபில வீதிக்கு இடையிலான பேராதனை - செங்கலடி வீதியில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக இந்த மண்சரிவு இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் மக்கள் அனைவரும் பாதுகாப்பான போக்குவரத்தை கடைப்பிடிக்குமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-6)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 600 | 400 | 500 | 600 |
| உருளைக்கிழங்கு | 160 | 200 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 1000 | 1200 | 1200 | 1200 |
| தக்காளி | 700 | 650 | 500 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 150 |
| கோவா | 450 | 400 | 550 | 400 |
| கரட் | 400 | 700 | 750 | 800 |
| பூசணி | 160 | 160 | 180 | 200 |
| புடோல் | 320 | 300 | 250 | 400 |
| வாழைக்காய் | 220 | 200 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 500 | 400 | 400 | 500 |
| பெரிய் வெங்காயம் | 550 | 450 | 450 | 500 |
| பாகற்காய் | 800 | 800 | 600 | 800 |
| வெண்டக்காய் | 300 | 250 | 240 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 200 |
| பயற்றங்காய் | 600 | 400 | 500 | 600 |
| லீக்ஸ் | 400 | 380 | 400 | 500 |
| பீற்றூட் | 600 | 600 | 600 | 800 |
| கறிமிளகாய் | 650 | 700 | 600 | 800 |
| முருங்கைக்காய் | --- | --- | --- | --- |
| போஞ்சி | 550 | 450 | 600 | 700 |
| கத்தரிதம்புள்ள | 550 | 200 | 550 | 550 |
| கீரை – 1 பிடி | 150 | 160 | 200 | 250 |
| தேசிக்காய் | 800 | 400 | 400 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 800 | 600 | 600 | 600 |
| வெங்காயப்பூ | --- | --- | --- | --- |
| முள்ளங்கி | 220 | 200 | 300 | 400 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 80 |
| வல்லாரை | 100 | 40 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 180 | 120 | 150 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3003

### ரிஜிந்தன்




### சௌமியா




### விதுசா




### தருணிகா




### கஜானா




### தருண்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெய[illegible] facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழில்...

யுறுத்தியுள்ளார்.

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தின்போதே ஆளுநர் இதனை குறிப்பிட்டார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் ஆகியோரின் தலைமையில், மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

யாழ்.மாவட்ட விவசாயிகளுக்காக இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்கில் பக்ரீறியா தொற்று ஏற்பட்டமை தொடர்பில் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் வட மாகாண பிரதி பணிப்பாளரிடம், ஆளுநர் கேள்விகளை முன்வைத்தார்.

எவ்வித தரச்சான்றிதழும் இன்றி குப்பிளான் களஞ்சியசாலைக்கு விதை உருளைக்கிழங்குகள் எவ்வாறு கொண்டுவரப்பட்டன, இதற்கான அனுமதியை வழங்கியது யார்?, தற்போது அவற்றை அழிப்பதற்குரிய செலவுகள், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான மாற்றுச் செயற்பாடுகள் போன்ற பல விடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் கேள்விகளை முன்வைத்தார்.

இந்நிலையில் விதை உருளைக்கிழங்கு இறக்குமதியில் மோசடிகள் இடம்பெற்றிருக்கக்கூடும் என்பதால் அதுகுறித்து விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் வலியுறுத்தினார். இந்த தீர்மானத்திற்கு இணைத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இணக்கம் தெரிவித்தார். (ம-7,33)

## 6 பொருட்களின்...

கப்பட்டுள்ளன.

நேற்று முதல் அமுலாகும் வகையில் இந்த விலை குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய ரின் மீன் ஒன்றின் விலை 55 ரூபாயினால் குறைக்கப்பட்டு 475 ரூபாயிற்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

உருளைக்கிழங்கு கிலோ ஒன்றின் விலை 5 ரூபாயினால் குறைக்கப்பட்டு புதிய விலை 280 ரூபாயாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சிவப்புப் பச்சை அரிசி கிலோ ஒன்றின் விலை 5 ரூபாயால் குறைக்கப்பட்டு 175 ரூபாயிற்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

மேலும், சிவப்புப் பருப்பு, வெள்ளை நாட்டரிசி மற்றும் வெள்ளைப் பச்சை அரிசி ஆகியவற்றின் விலைகள் தலா ஒரு ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மன்னாரில்...

டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் மரியதாஸ் ரொனால்ட் ரீகன் (வயது-43) இரண்டு பிள்ளைகளின் தந்தையான கூலித் தொழிலாளி என தெரியவந்துள்ளது.

குறித்த நபரை கடந்த இரண்டு நாட்களாகக் காணாத நிலையில் உயிரிழந்த நபரின் நண்பர் ஒருவர் நேற்றுக் காலை அவரை அவரது இல்லத்தில் தேடிச்சென்ற நிலையில் மழை வெள்ளத்தில் இறந்து கிடந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## பொதுச் சுகாதார...

குழுக் கூட்டத்தில் டெங்கு தொடர்பில் கலந்துரையாடப்பட்டபோதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

டெங்குவை காவும் நுளம்புகள் வீரியம் மிக்க நுளம்புகளாக உள்ளதாக பூச்சியியல் ஆய்வு சுகாதார அதிகாரிகள் சுட்டிக் காட்டுகின்றனர் என்றார். (ம-7)

## பயங்கரவாத...

கக் குரல் எழுப்புவோர் உயர் நீதிமன்றத்தை நாடலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மாற்றீடாக அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ[illegible] பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

இருப்பினும், இதற்கு பல தரப்பிலிருந்தும் எதிர்ப்புக்கள் வெளியானதை அடுத்து திருத்த முன்மொழிவுகள் கோரப்பட்டு, ஒக்ரோபர் மாதம் 3ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

எனினும், அன்றையதினம் இணையப் பாதுகாப்புச் சட்டமூலம் மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டது.

தற்போது, திருத்தங்கள் அடங்கிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை ஜனவரியில் சமர்ப்பிக்கவுள்ளதாக விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம-7)

## யாழ்.ஒருங்...

தேவானந்தா மற்றும் இணைத்தலைவர்களான வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் மற்றும் அரச அதிபர் தலைமையில் நேற்று நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

இந்தியாவிற்கு அனைத்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் சென்று இந்திய அரசுடன் பேசி மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணலாம் எனவும் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன்,

சாதாரணமாக டெங்கு விடயம் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கூறுகின்றீர்கள். ஆனால் நீங்கள் கடற்தொழில் அமைச்சராக இருந்து கொண்டு இந்திய இழுவைமடி பிரச்சினைக்கு தீர்வு காண முடியவில்லை என கடுந்தொனியில் தெரிவித்தபோது குழப்பம் ஏற்பட்டு வாய்த் தர்க்கமாக மாறியதால் சபையில் குழப்ப நிலை ஏற்பட்டது.

மேலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்டோருக்கும் இடையில் இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பில் கருத்து மோதல் ஏற்பட்டது.

இதன்போது ஒரு கட்டத்தில் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களை விமர்சித்து உரையாற்றிக் கொண்டிருந்த நபர் திடீரென கூட்டத்திற்கு நடுவே வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து அங்கு வந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் நிலைமை கட்டுக்குள் வந்தது.

அமைச்சர் கட்சி ஆதரவாளர்களை அழைத்து கட்சிக் கூட்டத்தை நடத்துவதாக பாராளுமன்ற உறுப்பினர்கள், அதன்போது குற்றம் சாட்டினர்.

அதற்கு அமைச்சர் குறித்த நபர் பொது அமைப்பை சேர்ந்தவர் என தெரிவித்து சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்தார். (ம-7,33)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

**மெகா 60** — திகதி 28/12/2023, சீட்டிழுப்பு இலக்கம் 006 — 04 | 33 51 62 — 18506 — 39898

**லக்கி 7 VIP** — திகதி 2023.12.28, சீட்டிழுப்பு இலக்கம் 0168 — C 5 8 6 8 9 1 C

**தன நிதானய** — திகதி 2023.12.28, சீட்டிழுப்பு இலக்கம் 1372 — J 12 29 42 56 J — 23170

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3584, சீட்டிழுப்பு திகதி 28.12.2023 — H 14 43 45 47 — H 60360

**HANDAHANA** உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2023.12.28, சீட்டிழுப்பு இலக்கம் 0651 — தனுசு 15 30 33 55 தனுசு — 54443 — 19

**மஹஜன சம்பத** — திகதி 2023/12/28, சீட்டிழுப்பு இலக்கம் 5342 — X 6 9 9 5 3 3

**மெகா பவர்** — திகதி 28/12/2023, சீட்டிழுப்பு இலக்கம் 1690 — X 21 05 11 40 48 — 18888

**உத்தியோகபூர்வ முடிவுகள்** — 28.12.2023, வெற்றி வாரம் 050, வர்ணம் ஊதா — V 7 3 3 6 0 4 — 68791 — அடுத்த சுப்பர் ஜக்பொட் 25,010,759.20

**SUPER BALL** — சீட்டிழுப்பு வாரம் 2316, வர்ணம் பச்சை, சீட்டிழுப்பு திகதி 2023.12.28, தினம் வியாழக்கிழமை — 22 26 48 75 R — 45795 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,823,980/-

**சனிதா** — திகதி 2023.12.28, வெற்றி வாரம் 4477, வர்ணம் சிவப்பு — 09 19 34 66 R — 66631 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,217,550.40

**ராசி** — சீட்டிழுப்பு வாரம் 4028, வர்ணம் கபிலம், சீட்டிழுப்பு திகதி 2023.12.28, தினம் வியாழக்கிழமை — 07 25 30 62 கும்பம் — 284417 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,658,826.40

**ஜய** — சீட்டிழுப்பு வாரம் 1492, 2023.12.28 வியாழன் — L 29 14 26 33 36 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 483,239,414.20

**அட கோடிபதி** — வியாழக்கிழமை, வெற்றி வாரம் 2142, சீட்டிழுப்பு திகதி 2023.12.28 — 01 34 68 74 B — 264786 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 79,316,713.60/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் பாரிய போதை வியாபாரம் தொடர்பில் வெளிவருவதில்லை

## சிறீதரன் எம்.பி குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் பாரிய ளவில் போதைப்பொருள் வியாபாரம் புரிபவர்களின் விடயங்கள் வெளியில் வருவதில்லை.

ஆனால் சாதாரணமாக கைது செய்யப்படுபவர்கள் மாத்திரம் பிரபல்ய படுத்தப்படுகின்றார்கள் என பாராளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குற்றம் சாட்டினார்,

யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற மாவட்ட ஒருங் கிணைப்புக்குழு கூட்டத்தில் போதை வஸ்துவிடயம் தொடர்பில் ஆராயும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்

அண்மையில் கொழும்பில் இரு ந்து யாழ்ப்பாணத்திற்கு போதைப் பொருள் கடத்த முனைந்தவர் கைது செய்யப்பட்டார் என பத்திரிகைகளில் பார்த்தோம் ஆனால் அந்த விடயங் கள் ஒன்றும் பொலிஸாரால் தெரியப்ப டுத்தப்படவில்லை.

ஏன் இவ்வாறு செய்கின்றார்கள் இதேவேளை சிறிய சிறிய தொகை களில் கைது செய்யப்படுவோரை உடனடியாக ஊடகங்கள் வாயிலாக தெரியப்படுத்துகின்றார்கள்.

பெரிய பண முதலைகள் கைது செய்யுப்படும்போது அந்த தகவல்கள் வெளியில் வருவதில்லை. ஏன் பொலி ஸார் இவ்வாறு செயற்படுகின்றார்கள் என தெரியவில்லை.

நாங்கள் பியர் பற்றி கதைத்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் நாட்டில் ஏதோ நடக்கின்றது ஏதோ பொருட்களை எல்லாம் கொண்டு வருகின்றார்கள் நாங்கள் இப்போதும் பியர், கஞ்சாவை பற்றி கதைத்துக் கொண்டிருக்கின்றோம் எனவும் பொலிஸார் இது தொடர்பில் நேர் மையாக செயற்படவேண்டுமெனவும் தெரிவித்தார். (ம-7)

# சர்வதேச நிகழ்ச்சி நிரலில் செயற்படும் தமிழ் எம்.பிக்கள்

## பெரமுன குற்றச்சாட்டு

(கொழும்பு)

சர்வதேச நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கமைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் செயற் பட்டு வருவதாக ஶ்ரீல ங்கா பொதுஜன பெர முன குற்றம் சாட்டியு ள்ளது.

இதன்படி, இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கமைய இரா. சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் செயல்படுவதாக அந்த கட்சியின் பொதுச்செய லாளர் சாகர காரியவசம் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கமைய செயல்படும் தமிழ் அரசி யல்வாதிகள் விரும்பும் அரசியல் தீர்வை வழ ங்க ஶ்ரீலங்கா பொது ஜன பெரமுனஒரு போதும் இடமளிக்காது என சாகர காரியவசம் திட்டவட் டமாக கூறியுள்ளார்.(ம-7)

# எரிபொருள்...

எரிபொருள் மற்றும் எரிவாயு மீதான VAT வரியை நடைமுறைப்படுத்துவதற்கு முன், துறைமுகம் மற்றும் விமான நிலைய வரி நீக்கப்படும் என நிதியமைச்சின் வரி கொள்கை ஆலோசகர் தனுஜா பெரேரா தெரிவித்தார்.

அதன்படி, எரிபொருளுக்கான 18 சதவீத VAT வரியை அமுல்படுத்தும் போது, 7.5 சதவீத துறைமுகம் மற்றும் விமான நிலைய வரி நீக்கப்படும் எனவும் தனுஜா பெரேரா தெரிவித்தார்.

மேலும், எரிவாயுவுக்கான 18 சதவீத VAT வரியை அமுல்படுத்தும்போது, 2.5 சதவீத துறைமுகம் மற்றும் விமான நிலைய வரி நீக்கப்படும் எனவும் தனுஜா பெரேரா தெரிவித்தார். (ம-7)


வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் DHL
சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
திருமுருகன் கொம்நெற் 321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528 (18357)

தரம் 6 (2024) குழு வகுப்புகள்
◆தமிழ் ◆கணிதம்
◆விஞ்ஞானம் ◆வரலாறு
◆ஆங்கிலம் ◆சுகாதாரம்
◆குடியுரிமை ◆புவியியல்
◆ICT ◆சிங்களம்
(18397)
ஆரம்பம் : 30.12.2023 சனிக்கிழமை 11.30
NEWTON GROUP CLASSES
No.18/18, Wyman Road, Nallur.
☎-077 792 3653

பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
K.K.S வீதி, சுன்னாகம்.
BARATHY
சித்தன்கேணி
(எமது மூன்று நிறுவனங்களிலும்)
A/L 2025
கலை - வர்த்தகம்
மீண்டும் புதிய பிரிவு நாளை ஆரம்பம் 30.12.2023 சனிக்கிழமை
◆ஆரம்பத்திலிருந்து சகல பாடங்களும் கற்பிக்கப்படும்.
◆இதுவே இறுதிப் பிரிவு என்பதனால் அனுமதிகளை தவறவிடாதீர்கள்.
◆எமது தனித்துவமும் அதி திறனையும் கொண்ட ஆசிரியர்
◆குழுவினால் கற்பிக்கப்படுகிறது.
◆விடுமுறைக்கால வகுப்புக்கள் தினமும்.
(C-8040)
நேர அட்டவணை தொடர்புகளுக்கு
யாழ்ப்பாணம் - 077 220 9651
சுன்னாகம் - 076 638 5294
சித்தன்கேணி - 077 940 8682

பொங்கல் அகப்பை விற்பனைக்கு
தைப்பொங்கல் வியாபாரத்தை சிறப்பிக்க இன்றே முந்துங்கள்
● அகப்பைகள்
● விளக்குமாறு
● திருவுபலகை
● இருபலகை
● ரொட்டித் தட்டு, சுளகு

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
077 210 5286 (16412)

VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
✔ONLINE APPLICATIONS
✔VISA APPOINTMENTS
✔PASSPORT APPLICATION
✔POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்
(C-8044)
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS 49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம். V2 TRAVELS
0777-068-777

Canada and Italy Visa
(Canada, Italy, UK, USA) Work visa, Visitor visa, students visa & business visa செய்து தரப்படும். மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
VISA CONSULTANT
134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.
077 038 5584 (18358)

சிறிராம் ஜுவல்லர்ஸ்
இல. 158, 193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ஆண்டு இறுதியை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத்தள்ளுபடி.

◆செய்கூலி, சேதாரமின்றி ஆபரணங்கள் வழங்கப்படும்.
◆அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் 01.01.2024 வரையும் விசேட விலைக்கழிவில் வழங்கப்படும்.
ஒருமுறை வந்து பாருங்கள் ஒத்துக்கொள்வீர்
◆அனைத்து ஆபரணங்களுக்கும் தரச்சான்றிதழ்கள் வழங்கப்படும்.
◆தங்கத்தின் அன்றைய நாள் விலை நிலைவரத்தின் படி ஆபரணங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படும்.
(C-8036)
077 165 1729, 077 773 0567, 021 222 8334

காணி விற்பனைக்கு
உரும்பிராய் பகுதியில் 6 3/4 பரப்பு தோட்டச் செய்கைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு (18413)
076 277 6856

CANADA VISITOR VISA
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-8044)
0777-068-777
49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம் V2 TRAVELS

காணி விற்பனைக்கு
GOLDEN Real Estate
கைதடிச் சந்திக்கு அருகாமையில் 30 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.
■ கைதடிச் சந்தியில் இந்து 250m தூரத்தில்
■ வங்கிகள் தபால் நிலையம் 200m தூரம் ■ 20 அடி பாதை
■ A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50m தூரம்)
■ நன்னீர் ஊற்று நிலம்
■ இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
■ சித்த போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிராக அமைந்துள்ளது.
■ வீடுகள் கட்டுவதற்கும் மண்டபங்கள் அமைப்பதற்கும் சிறந்த காணி
■ வடமாகாண சபை அலுவலகம் 300m தூரத்தில்
■ சித்த மருத்துவபீட பல்கலைக்கழகம் 200m தூரத்தில்
■ அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து கொள்முதல் செய்து கொள்ளமுடியும்
■ பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை
(18416)
077 468 3354, 071 173 3911


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபன [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org